உ

“ ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”

சைவ முன்னேற்றச் சங்கம்
UNITED KINGDOM
கலசம்

# கலசம்
# KALASAM

தை-மாசி-பங்குனி 1995



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் 50p

கைலாசந்தா கோயில், காஞ்சிபுரம்



உ

தென்னவன் சிவனின் திருவருட்டிறன் சொல்லும்
தெய்வீக எழுத்துக்கள் எத்தனையோ அத்தனைக்கும்
எங்களது ஆத்மீக வணக்கங்கள்

ஆசிரியர் குழுவும் வாசகர்களும்

ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்

தை ~ மாசி ~ பங்குனி 1995

மணி 3 ஒலி 9

## எங்கே போகிறோம் ?

காரண காரியங்களை நாமே உருவாக்கிக் கொண்டு, போகும் இடம் தெரியாமல் தவிக்கிறோம். சமயம் சமூகத்தை விட்டு விலகித் தனிக் குடித்தனம் செய்யும் துர்ப்பாக்கிய நிலைமை, மேற்கு நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த மக்களிடையே அரங்கேறிக் கொண்டிருக்கிறது. எங்கே போகிறோம் என்று யாருக்கும் புரியவில்லை. புரிந்தவர்கள் கூறினால் புரியாதவர்கள் கேட்பதற்கும் தயாராகவில்லை.

புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் இருதோணிகளில் கால் வைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு தோணியில் தேவாரம், திருவாசகம், ஆகிய ஆத்மீகப் புத்தகங்களும் மறு தோணியில் விஸ்கி, பிரண்டி, மாமிசம், மைக்கல் ஜக்சன் பாட்டு, டிஸ்கோ ஆகியவையும் அடங்க, தமிழ்ச் சமூகம் இரு தோணிகளையும் இறுகப் பிடித்த வண்ணம் வாழத் தொடங்கியிருக்கிறது.

கவிழப் போவதென்னவோ நிச்சயம்தான் ! ஆனால் எப்போ என்பதுதான் புரியவில்லை?

எதிர் கால தமிழ் இந்துக்கள் அல்லது சைவர்கள் என்று கருதப்படுகின்ற நிகழ்காலச் சிறுவர்கள் இந்த இரு தோணி விளையாட்டில் பிரபலமடைந்து வருகிறார்கள். இதற்குப் பெற்றார்களாகிய நாமும் துணைபோவதுதான் வருந்தத்தக்க விடயம்.

ஆங்கில கலாச்சாரபாணியிலான நடனங்களில் பங்குபற்றுவதும் அவர்கள் பாணியிலான ஆண்–பெண் நடன உருவகங்களில் சுகம் பெறுவதும் சுதந்திரம் நிறைந்த சுகதேக எதிர்கால தமிழ்ச் சமூகம் உருவாவதைக் கேள்விக் குறியாக்கி உள்ளதை பெற்றார்களாகிய நாம் கவனத்திற் கொள்ளாவிட்டால் நாளை எழுதப்படும் தமிழ்ச் சமூக வரலாற்றில் நாம் குற்றவாளிகளாகக் காணப்படுவோம்.

வேறுபட்ட கலாச்சாரங்களிலிருந்து நல்லவற்றைத்தான் நாம் தேர்ந்தெடுக்கவேண்டுமேயொழிய தீயவற்றையல்ல என்பதை எம் பிள்ளைகளுக்கு நாம் எடுத்துக் கூறுவது கடமையாகிறது. மேற்கு நாடுகளில் ஆல்போல் வேரூன்றியிருக்கும் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தவறாது தேவாலயம் செல்வது வழக்கம். இதேபோல வெள்ளி, சனி இரவுகளிலும் விசேட தினங்களிலும் அவர்கள் டிஸ்கோ எனப்படுகின்ற அவர்களின் கலாச்சார அங்கத்தில் ஊறித்திளைத்து கேளிக்கை புரிவது உண்டு. இந்தக்கலாச்சாரப் பின்னணியில் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் படிக்கும் எமது பிள்ளைகள் அவர்களைப்போல ஆடவேண்டும் பழகவேண்டும் இவை தவிர்க்க முடியாதது என்றெல்லாம் காரணம் கற்பிக்கும் பெற்றார் தங்கள் பிள்ளைகள் அவர்களைப்போல் ஆகக்குறைந்தது ஒரு நாளாவது ஆலயம் சென்று வணங்க வேண்டும் தேவாரம் கூறவேண்டும் என்று வற்புறுத்துவது இல்லை என்பதை நினைக்கும்போது எங்கே போகிறோம் என்று வினாவாமல் என்ன செய்ய முடியும்.

பிள்ளைகள் மிகச்சிறுவர்களாக இருக்கும்போது அவர்களை ஆலயங்களுக்கு வலிந்து கூட்டிவரும் பெற்றோர் வளர்ந்த பின் வீட்டில் விட்டு தாங்கள் இருவரும் ஆலயம் வந்து வணங்கிவிட்டுச்செல்லும் போது பிள்ளைகள் எங்கே என்று யாராவது கேட்டால் அவர்கள் வளர்ந்திட்டினம் இந்தக்காலத்தில் அவையளை கேட்கேலாது என்று நாசூக்காகப் பதில் சொல்கின்ற அவர்களின் பிரகடனப்படுத்தப்பட்ட இயலாமையைப் பார்த்து எங்கே போகிறோம் என்று கேட்காமல் வேறு என்ன தான்செய்வது? இவற்றால் எல்லாம், மனம் துண்டு துண்டாக்கப்பட்டு ரணமாக்கப்பட்ட நிலையில் தான் இந்தத் தலையங்கம் எங்கே போகிறோம் என்று தலைப்பிடப்பட்டு எழுதப்படுகின்றது. பெற்றார்களே! எங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் இரண்டும்கெட்டான் இனமாக இல்லாமல் ஆகக்குறைந்த நிலையில் ஒரு இந்துவாகத்தன்னும் வாழ வழிவகுப்பது எங்கள் கடமையல்லவா!

எங்கள் பிள்ளைகள் நடந்துபோகும் பாதை உயர்வானதாக இருக்க தகுந்த அத்திவாரம் இடவேண்டியது எங்கள் கடமைதானே. சூழ்நிலைகளின் உக்கிரத்தால் அறியாவயதில் அவர்கள் எடுக்கும் திரிசங்கு முடிவுகளுக்கு நாங்களும் தலையாட்டி நாங்களாகவே பல காரணங்களை மேதாவிலாசத்துடன் உருவாக்கி எங்களை நாங்களே திருப்திப்படுத்திக்கொள்ளும் அர்த்தமற்ற அறிவற்ற நழுவல்போக்கில் இருந்து நழுவி பிள்ளைகளை சரியான பாதையில் நெறிப்படுத்துவோம். இதுவே நியாயமும் ஆத்மீக ஆத்மார்த்தம் நிறைந்ததுமாகும். பெற்றார்களே! விழித்தெழுவோம்.!

எங்கே போகின்றோம் என்பதற்கான விடை எமக்குத் தெரியாதது போல் எங்கள் பிள்ளைகளுக்கும் தெரியாமல் போகக்கூடாதல்லவா?

மு. நற்குணதயாளன்

ஆசிரியர் : மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர் : க. ஜெகதீஸ்வரன் நிர்வாகத் தொடர்பு : வ.இ. இராமநாதன்
பொருளாரத் தொடர்பு : சிவ. அசோகன் பொதுமக்கள் தொடர்பு : மாணிக்கம் சுரேஷ்
விற்பனை விநியோகம் : இ.முருகதாசன் மகளிர் பகுதி : திருமதி உமா ஜெயக்குமார்
வெளியீடு : சைவ முன்னேற்றச் சங்கம்(பிரித்தானியா)
அச்சமைப்பும் வடிவமைப்பும்: சைவ முன்னேற்றச் சங்கம்(பிரித்தானியா) அச்சுப் பதிவு : செல்வம் அச்சகம்

KALASAM , 42 STONELEIGH ROAD, CLAYHALL, ILFORD IG5 OJD

# தைபிறந்தால் வழி பிறக்கும்



கலசம் வாசகர்களுக்கும்
சைவ முன்னேற்றச் சங்க
அபிமானிகள்
ஆதரவாளர்கள்
அங்கத்தவர்கள்
ஆகியோருக்கும்
எமது உள்ளம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்

கலசம் ஆசிரியர் குழு
சைவ முன்னேற்றச் சங்க
ஆட்சிக்குழு

ஆதவனின் கதிரொளியில்
பால்பொங்கி வழிந்தோடும்
நாதமுடன் கீதம்தான்
இழைந்துநின்று இசைபாடும்
வேதமுடன் ஆகமங்கள்
திருமுறைகள் துதிகேட்கும்
ஓதுபவர் துயர்விலகும்
உள்ளமது மகிழ்ந்திருக்கும்


செங்கரும்பின் இனிப்போடு
நாவதுவும் அசைபோடும்
சங்கத்தமிழ் இசையினிலே
தத்துவங்கள் விளங்கிநிற்கும்
அங்கங்கள் வீறுகொள்
வீரந்தான் முன்னிற்கும்
சங்கத்தால் சைவம்தான்
முன்னேற்றம் கண்டிடுமே.

தைபிறந்தால் வழிபிறக்கும்
தாய்நாடு மனம் களிக்கும்
மைவிழியார் கன்னியர்கள்
மனங்குளிர மணம்நிகழும்
கைகள்பல சேர்ந்துநற்
காரியங்கள் நிறைவேறும்
பைந்தமிழின் புகழ் மணக்கும்
பார்வதியின் அருள்கிடைக்கும்.

சிவஸ்ரீ நாகநாதசிவம்

# தத்துவங்கள்

தத்துவங்களைக் கண்டு ஏராளமானவர்கள் பயம் கொள்கின்றார்கள். தத்துவம் பேச நம்மால் எல்லாம் ஏலாதப்பா என்று ஒதுங்கிவிடுகின்றார்கள். தத்துவங்கள் ஒரு சிலருக்கே உருவானதாகவும் தாங்கள் அதற்கு லாயக்கற்றவர்களாகவும் கருதி அறவே ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். இந்த நிலைப்பாடு மிகத் தவறான ஒன்றாகும். இதற்குக் காரணம் பிரகடனப்படுத்தப்பட்ட சில தத்துவாசிரியர்களின் தெளிவற்ற தத்துவங்களும் முன்னுக்குப்பின் முரணான தத்துவச் சிதறல்களுமேதான் என்று சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். தத்துவம் என்பது சிந்தனையின் முடிவிற் பெறப்படுகின்ற முடிவுரையாகும். இந்த முடிவுரை சரியாக இருக்கவேண்டுமானால் சிந்தனை சரியாக இருக்க வேண்டும். சிந்தனை சரியாக இருக்க மனம் ஒரு நிலையில் இருக்க வேண்டும். இந்த ஆரம்பவுரையிற் சரியான ஒரு தத்துவம் உருவாவதில்லை. சிந்தனை ஒப்பீட்டுடன் உருவாகும் போதுதான் தத்துவம் உருவாகின்றது. அதாவது ஒன்றைப்பற்றிய சிந்தனை இன்னொன்றின் இயக்கத்தோடு ஒன்றிணைக்கப்படும்போது சரியான ஒரு தத்துவம் உருவாவதற்கான வாய்ப்பு உருவாகின்றது. இந்த உருவாக்கம் தத்துவம் என்ற பெயரைப் பெறுகின்றது. இது என்றென்றைக்கும் நிலையானதென்றோ அல்லது உருவாக்கப்பட்ட காலத்தில் யாராலும் மறுதலிக்க முடியாத ஒன்று என்றோ எண்ணக்கூடாது. உருவாக்கப்பட்ட தத்துவங்களை அடிப்படையாக வைத்தே சிலர் சிந்திக்க ஆரம்பிக்கின்றார்கள். அவர்களின் சிந்தனை முடிவு, அடிப்படையைச் சில சமயங்களில் மறுதலிக்க வைக்கின்றது. அத்தோடல்லாமற் புதிய தத்துவத்தை உலகுக்கு வழங்கவும் முன்வருகின்றது.



அணுவைப் பிரிக்கமுடியாது என்று ஒரு விஞ்ஞானி கூறினார். இவருடைய கண்டுபிடிப்பை அடிப்படையாக வைத்துச் சிந்தித்த இன்னொரு விஞ்ஞானி அணுவைப் பிரிக்கலாம் என்றார். பிரித்த அணுவிலிருந்து உலகிற்கு மாபெரும் சக்தியை வழங்கலாம் என்கின்ற மாபெரும் தத்துவத்தையும் முன்வைத்தார்.

இங்கே ஒரு தத்துவம் இன்னொரு தத்துவமாகப் பரிமாணம் அடைவதை நாம் அவதானிக்க வேண்டும். இந்த உலக ஈடேற்றத்திற்காக மாபெரும் தத்துவங்களையெல்லாம் தந்தவர்கள் மிகப் பெரிய கல்விமான்களல்ல. வெறும் ஆரம்பப் படிப்புடனேயே சிந்தனையாளர்களாக மாறியவர்கள்தான்.

குளியலறையிலே ஒரு தத்துவத்தைக் கண்டான் ஒரு விஞ்ஞானி.

மரத்துக்குக் கீழே படுத்திருக்கும்போது ஒரு தத்துவத்தைக் கண்டான் இன்னொரு விஞ்ஞானி. பறவைகள் பறப்பதைக் கண்டு ஒரு தத்துவத்தைத் தந்தான் இன்னொரு விஞ்ஞானி.

இப்படியெல்லாம் சாதாரண நிகழ்வுகளிலிருந்து தத்துவங்கள் உருவாகி இருக்கும்போது இந்தத் தத்துவங்களைக் கண்டு ஏன் மிரளுவான்.

அர்த்தமற்ற இந்தப் பய உணர்விலிருந்து எம்மை விடுவித்துக்கொண்டு நாமும் ஏன் சிந்தனையாளர்களாக மாறக்கூடாது என்று சிந்திக்க வேண்டும் . அப்போதுதான் நாம் மானிடராய்ப் பிறந்ததற்கு ஒர் அர்த்தம் உருவாகும்.

தத்துவங்களிலே ஆத்மீக தத்துவங்கள் அழகு மிகுந்தவை, அற்புதமானவை. இதற்குக் காரணம் கடவுளின் அருளை அடிப்படையாக வைத்துச் சிந்தித்ததேயாகும்.

பொருளின் தோற்றத்தைக் கண்டுபிடிக்க விஞ்ஞானி புறப்பட்டபோது அந்தப் பொருளுக்குள் மறைந்திருந்த இறைவனைத் தேடி ஆத்மீக சிந்தனையாளன் புறப்பட்டான். அகத்தினுள்ளே புகுந்து ஆராய்ந்து சிந்தித்ததனாற்றானோ என்னவோ அவனது முடிவுரை அழகாக இருந்தது. இதனை அழித்துத் திருத்தவும் முடியவில்லை.

ஆத்மீக தத்துவங்கள் புதிய சிந்தனைகளினூடாக வளர்ந்திருக்கின்றனவே ஒழிய அடிப்படையை அழித்துப் புதியதாகத் தோன்றவில்லை. இதிலிருந்து ஆத்மீக தத்துவங்களின் இறுக்கமும் அழகும் எவ்வளவு என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

பிரபஞ்சத்தின் அகத்தை ஆராய்ந்த ஆத்மீக ஆய்வாளர்கள் பலர். அவர்கள் கண்டு பிடித்தவைகள் எல்லாம் உலகுக்குக் கிடைத்த பொக்கிஷங்கள். நேற்று இன்று நாளை என்றில்லாமல் என்றும் பிரகாசித்துச் சுடர்விடக்கூடிய தத்துவங்களாக இருந்தன.

காலத்துக்குக் காலம் இந்த ஆத்மீக சிந்தனையாளர்கள் தோன்றுகின்றார்கள். சிலருடைய பெயர்களால் மதங்களே உருவாகின. இவர்கள் மதங்களைப் பிரகடனப்படுத்தவில்லை. மக்களே மதங்களைப் பிரகடனப்படுத்தினார்கள். இந்த உருவாக்கங்கள் எல்லாம் ஆத்மீக சிந்தனைப்பாதையின் வளர்ச்சிக் கட்டங்களே. ஆத்மீக சிந்தனையின் ஆரம்பம் உபநிடதக்காலமாகும். உபநிடதங்களின் அடிப்படைக் கருத்துக்களை வைத்தே புதுப்புதுச் சிந்தனையாளர்கள் தோன்றினர். சிந்தனையாளர்கள் தோன்றத் தோன்ற உலக ஈடேற்றம் எவ்வளவு சுலபமாகின்றது?

**எல்லாருமே சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் இன்பத்தைத் தவிர வேறு எது தான் இவ்வுலகில் இருக்க முடியும்?**

**~சிவாயன்~**

# அமெரிக்க சுவாமிகளின் ஆத்மீக சொற்பொழிவு

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்று நாலின் நிறைவு நாள். பிற்பகல் வேளை. தமிழ் கவுசில் ஆத்மீகப் பேருரை நடைபெறுகிறது என்றறிந்து போயிருந்தேன் சைவ முன்னேற்றச் சங்கமும் சிவதொண்டன் நிலையமும் சேர்ந்து வழங்கிய இந்நிகழ்ச்சியில் உரையாற்ற வந்திருந்தவர் சுவாமி தந்திரதேவா அவர்கள். பொன்னும் பொருளும் நிறைந்த அமெரிக்க நாட்டிலே பிறந்து மண்ணிற் குருதியோடும் தமிழ் ஈழத்தில் மானிடசேவை புரிந்துகொண்டிருக்கும் இம்மனிதர் தாமறிந்த இந்துமதக் கருத்துகளை வந்தோரோடு பகிர்ந்துகொண்டார். தோற்றத்திலும் உடையிலும் எளிமையைக் கைக்கொள்ளும் இம்மனிதரின் கருத்துக்களும் மனதைக் கவர்வதாகவே அமைந்திருந்தன. தேவார பசனையோடு ஆரம்பித்த நிகழ்ச்சியின் முற்பகுதி சொற்பொழிவாகவும் பிற்பகுதி கேள்வி பதிலாகவும் அமைந்தது. அவற்றிலிருந்து சில துளிகளைக் கீழே தருகிறேன்.


மறுபிறவி பற்றியும் பூர்வபுண்ணிய பலன் பற்றியும் தமது மனதிலே எழுந்த வினாக்களுக்கான விடை தாம் பிறந்த கத்தோலிக்க மதத்திலே எங்குதேடியும் கிடைக்காமற் தேடியபோது இந்துமதம் தமக்கு விடையளிக்கவே தாம் இந்துவாகியதாகக் குறிப்பிடும் இவர் தற்பெருமை பேசுவதை விரும்புவதில்லை. ஒரு மதத்திலே மட்டும் நம்பிக்கை வைத்து ஒரு வழியிலே மட்டும் நடக்க வேண்டும் என்பது இவர் கொள்கை. அதனால் ஏனைய மதங்களை இழிவு படுத்துவதும் இல்லை. அனைவருமே தமது சகோதரர்கள் என்றே கருதுகிறார். நாம் ஓரிடத்துக்குப் போகவேண்டுமாயின் போகும் வழியையும் உபயோகிக்கும் வாகனத்தையும் சரியாகத் தெரிந்து பின் அதிலிருந்து மாறாது போனால் இடத்தை அடைவோம். அன்றி வேறு வழிகளைத் தேடுவோமானால் சுற்றிச் சுற்றிக் கஷ்டப்பட்டபின்னரே அடைவோம் என்பது அவர் தந்த விளக்கம்.

நெற்றியிலே திருநீறு பூசிக்கொண்டு சமய சிந்தனை இன்றித் திரிபவர்கள், எந்திரமில்லாத காரை வாங்கித் தமது வீட்டுக்கு முன்னால் அழகுக்காக விட்டிருப்பவர்களைப்போல என்று குறிப்பிட்டார். தொடர்ந்து கோவில் வழிபாட்டின் அவசியத்தை விளக்கினார். கோவிலிலே மூன்று ஓசைகள் கேட்கவேண்டும். முதலாவது மணியோசை. இதற்கு money தேவை. இரண்டாவது வேத ஓசை. இதற்கும் சிவாசாரியரை நியமிக்கப் பணம் தேவை. ஆனால் எந்தச்செலவும் இன்றி ஆக்கக்கூடிய ஓசைதான் மூன்றா வது ஓசையான பஜனை ஓசை. நாம் ஆலயத்திலே போய் எவ்வளவு துதிப்பாடல்களைப் பாடுகிறோமோ அவ்வளவு பலன்பெறுவோம். பலர் ஒருமித்துப் பாடுவதால் பக்தியும் வளர்கிறது. ஆன்மீக சிந்தனையும் வரும் என்பது இவரின் கருத்து.

இந்துமதம் மூன்றுமாடிக் கட்டடம் போன்றது. முதலாவது மாடி பக்தி. இரண்டாவது மாடி மானிடசேவை. மூன்றாவது மாடி ராஜயோகம். முதல் இரண்டையும் கடந்தவர்கள் மட்டுமே மூன்றாவது மாடியை அடையமுடியும். அதன்பின் அவர்கள் முத்தி நிலையை அடைவார்கள். தாம் விளங்கிக்கொண்ட இந்துமதம்பற்றி இவ்வாறு சுவாமிகள் விளக்கினார்கள்.

இந்துக்கள் மாமிச உணவு சாப்பிடுவது பற்றிப் பேச்சுத் திரும்பியது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தாம் சைவ உணவுமட்டுமே உண்பதாகத் தெரிவித்த சுவாமிகள் சில இந்துக்களின் உணவு விடுதிகளில் பசுவின் மாமிசத்தை உணவாகக் கொடுப்பதை மிகவேதனையோடு தெரிவித்தார். ஏன் பசுவின் மாமிசத்தை மட்டும் குறிப்பிடு கின்றீர்கள் என்ற கேள்வி எழுந்தது. மாமிசம் எதுவுமே சாப்பிடாமல் இருப்பதுதான் சிறந்த வழி. ஆனால் அது முடியாதவர்கள் குறைந்தது மாட்டையாவது சாப்பிடாமல் இருப்பது நல்லது. ஏனெனில் சத்தான பாலைத் தருவது பசு. இது இறைவனின் அபிஷேகத்துக்கு உதவுகிறது. அதைவிட முக்கியமான விடயம் பசுவின் சாணி. இதைச் சுட்டல்லவா நாங்கள் சிவ சின்னமாகத் திருநீறு அணிகிறோம்? அப்படி உதவும் ஒருயிரை நாம் வதைத்து உணவாக அருந்துவது பாவம் என்பது அவர் வாதம். அப்படியாயின் தாவரங்களுக்கும் உயிர் இருக்கிறதே என்ற வினாவுக்கு, ஒன்றையும் உண்ணாமல் இருப்பது முடியாது, கூடுமானவரை கொலை செய்யாது இருப்பது நல்லது என்று பதிலளித்து உயிரினங்களில் பரிணாம வளர்ச்சியைப் பொறுத்துக் கொலைப் பாவம் அளவிட ப்படுகிறது என்று பதிலளித்தார்.தொன்மை வாய்ந்த இந்து மதத்தின் சில கருத்துகளை, குறுகிய நேரத்தில் நம்மோடு, அனைவரும் புரியக்கூடிய விதமாகப் பகிர்ந்துகொண்ட சுவாமிகள் பாராட்டப்படவேண்டியவர்.

**ஞாலக்கோ**



# சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்

"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவை சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெஞ்ஞான
நாட்டமுறும் எனில் இங்கு நான் அடைதல் வியப்பன்றே"
என்று கூறினார் வள்ளலார்.

மாணிக்கவாசகரின் திருவாசகம் பதிகங்களுட் சிறந்தது என்பது யாவர்க்கும் தெரிந்ததாகும். இத்திருவாசகத்தின் பொருள் உணர்ந்தவர் மிகச்சிலரேயாவர். திருவாசகக் கவிதைகள் காலம் கடந்து நிற்கின்றன. கவிதைகள் காலம் கடந்து நிற்பதன் கருத்து, அவை அக்கால கட்டங்களுக்குரிய சமுதாயத் தேவைகளோடு பின்னிப்பிணைந்து நிற்பதுவேயாகும்.

திருவாசகம் சமயம், காலம் இரண்டையும் கடந்து நிற்கின்றது. குறுகிய சமய வாதங்களுக்கு அப்பாற்பட்டு ஒருவனே தேவன் , அவனே யாவும் என்று கூறி நிற்பது திருவாசகம். திருவாசகத்தை ஐயம் திரிபறக் கற்க வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் கடமை. கற்பதோடு நிற்காமல் கற்றவற்றை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறவும் வேண்டும்.

தமிழ் இலக்கியமாகட்டும் சமயப்பதிகங்களாகட்டும் ஆரம்பத்தில் பிள்ளையார் காப்புடன் , கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிப்பதுவே வழக்கம். திருவாசகத்தில் அப்படியான ஒன்றைக் காணமுடியவில்லை. பிரணவத்தின் வடிவமேயான விநாயகனை எப்படி மாணிக்கவாசகர் தவற விட்டார் என்பது விடை காணவேண்டிய ஒரு வினாவாகும்.

மேற்படி வினாவுக்கு இரண்டு வகையான கருத்துக்களை நாம் முன் வைக்கலாம்.

மாணிக்கவாசகர் இறையருள் பெற்றுப் பாடத்தொடங்கியவர். பாட்டெடுத்துக்கொடுத்தவரே சிவன் தான் . மானிட நிலைக்கு அப்பாற்பட்டவர் இவர். இதனால் விநாயகனை வணங்கி அவனுக்குக் காப்புச் சொன்ன பின்பு தான் ஆரம்பிக்கவேண்டுமென்ற நியதி இவருக்கு ஏற்றதாக இருக்கவில்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அல்லது

சிவன் -பிள்ளையார்.- முருகன் ஆகிய மூவருமே ஒன்றுதான் ஆதலால் சிவனுக்குக் காப்புப் பாடினால்-வாழ்த்துப்பாடினால் போதுமென்று நினைத்தாரோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

இந்த எண்ணங்கள் ஆய்வுக்குரியனவே.

மாணிக்கவாசகரை சைவத்திற்குள் வைத்துப் பூட்டி விட்டனர். இவருடைய உலகம் தழுவிய பார்வையையும் சமூக மறுமலர்ச்சிச் சிந்தனைகளையும் சைவர்கள் மழுங்கடித்துவிட்டதாகவே எண்ணத்தோன்றுகின்றது.

மு.நற்குணதயாளன்

ஆத்மீகத் தத்துவங்களை கூற அல்லது வெளிப்படுத்த இவர் கையாண்ட உத்திகள் யாவும் உலக மகாகவிகளின் வரிசையில் இவரை முதன்மையானவராய்க் கருத வைத்த போதிலும் மதத்தின் பெயரால் இவருக்கு மகுடம் சூட்டப்பட்டு இவரின் கவிதா விலாசம் முற்றாக மறைக்கப்பட்டது. இதற்குக் காரணம் இவர் இறைவனால் பாடவைக்கப்பட்டவர் என்றும் இறைவனோடு மிக அன்னியோன்னியமான நட்புக்கொண்டவர்

என்றும், இவருள் இருந்து இறைவனே பாடினான் என்றும் கூறப்பட்டபோதிலும் ஆதாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளக்கூடியவைகளாக இவை இல்லை என்பது கவலைக்குரியதாகும். ஆக மொத்தத்தில் மாணிக்க வாசகர் சம்பந்தமான கடந்த காலப் பார்வைகள் கணிப்பீடுகள் திணித்தல்கள ஆகியவற்றிலிருந்து வெளியே வந்து அவரைப் பற்றிக் கூறவேண்டுமென்ற அவாவினால் எழுந்தது தான் இக்கட்டுரை.

மாணிக்கவாசகரைப் பற்றி ஆராயப்புகு முன்பு இரண்டு அடிப்படைகள் முன் வைக்கப்படுதல் வேண்டும்.

அவர்தம்,

1. தத்துவ ஆழம்.
2. கவிதா ஆற்றல்

இவ்விரண்டின் மேல் தான் ஆய்வுகள் எடுக்கப்பட வேண்டும் என்பது என் எண்ணம்

## ஒன்று

மாணிக்கவாசகரின் தத்துவ ஆழத்தை புரிந்து கொள்ள வேண்டின் அவர் தம் பாடல்களின் கருத்து க்களை புரிந்தகொள்ளுதல் அவசியமாகும். திருவாசக ப்பாடல்கள் யாவற்றிலும் சிவபுராணம் முதன்மை இடத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றது. சிவபுராணம் தமிழி லக்கிய கவிதை இலக்கணத்துள் கலிவெண்பா வகையைச் சேர்ந்ததாக உள்ளது. சிவபுராணத்தில் முதல் பதினாறு வரிகளும் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம். சிவபுராணம் என்றால் சிவனைக்குறித்த பழைய சரிதம் என்று கூறலாம். இதனால் தானோ என்னவோ கடவுள் வாழ்த்து விநாயகரைக்குறித்து அமையவில்லை.

பதினாறு வரிகளும் சிவனைக்குறித்தே அமைந்துள்ளன.

நமச்சிவாய வா அழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்கு சேயோந்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசனடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேசன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!

இப்பதினாறு அடிகளையும் நாம் உற்றுநோக்கில் ஒரு முக்கியமான விடயத்தை அவதானிக்கலாம். முதல் ஐந்து வரிகளும் 'வாழ்க' என்றும் அடுத்த ஐந்து வரிகளும் 'வெல்க' என்றும், தொடரும் ஆறு வரிகளும் 'போற்றி' என்றும் உள்ளதைக்காணலாம். மாணிக்கவாசகர் ***நமச்சிவாய*** என உத்தரகோசமங்கையில் அருளுபதேசம் பெற்றவர். ***சிவாய நம*** என கோகழியில் உபதேசம் பெற்றார். இதனாலே தான் நமசிவாய என்கின்ற திருவைந்தெழுத்தும் 'வாழ்க' என ஆரம்பிக்கின்றார்.

முதல் ஐந்து வரிகளின் கருத்துக்களைப் பார்ப்போம்

நமசிவாய வாழ்க!
நம் தலைவன் திருவடி வாழ்க!
இமைகள் அசைகின்ற அக்கணப்பொழுதிலும் என் நெஞ்சத்தை விட்டு நீங்காதவனின் திருவடிகள் வாழ்க! கோகழியில் (திருவாவடுதுறையில் என்னை ஆட்கொண்டு அருள் வழங்கிய குருவின் திருவடிகள் வாழ்க! மெய்ப்பொருளாகவே நின்று அருள் வழங்குகின்ற திருவடிகள் வாழ்க!
ஒன்றாகவும் பலவாகவும் தோற்றுகின்ற இறைவனுடைய திருவடிகள் வாழ்க!

இந்தக் கருத்துக்களை ஆழமாக நோக்கும்போது மாணிக்கவாசகர் முதல் ஐந்து வரிகளிலும் தன்னை ஆட்கொண்ட இறைவன் யார் என்பதை கூறி அவனை வாழ்த்துகின்றதைக் கவனிக்கலாம். நமசிவாயவாக இருப்பவனும், நெஞ்சில் நிறைந்து இருப்பவனும், குருவாக வந்தவனும், மெய்ப்பொருள் தான் அவன் என்றும், ஒன்று பலது எல்லாமே அவன் என்றும், அவனே தன் தலைவன் என்றும் கூறி வாழ்த்துகின்றார். வழக்கமாக எதையும் ஆரம்பிக்கும்போது கடவுளிடம் இருந்து வாழ்த்துப்பெறுவது தான் வழக்கம் ஆனால் மாணிக்கவாசகரோ வாழ்த்துத் தரவேண்டியவரையே வாழ்த்தி ஆரம்பிக்கின்றார். அவனை அறிமுகப்படுத்திய மாணிக்கவாசகர் அடுத்த கட்டத்திற்கு வருகிறார்.

**வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க** என்கின்றார்

ஆசைகளை நோக்கி வேகமாகச் செல்கின்ற விரைவைக்கெடுத்து என்னை ஆட்கொண்ட வேந்தன் என் இறைவன் திருவடிகள் வெல்க என்கிறார் .

**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க** என்கின்றார்.

பிஞ்ஞகம் என்றால் தலைப்பாகை.

ஆண்டவனுக்கு தலைப்பாகை அணி வித்தால் அக்கோலம் திருக்கோலம் என்பர். பிறவித்தளையை அறுத்தெறிகின்ற திருக்கோலம் கொண்ட இறைவன் திருவடிகள் வெல்க என்கின்றார்.

## புறத்தார்க்கு சேயோந்தன் பூங்கழல்கள் வெல்க

இங்கு சேயோன் என்றால் அன்னியன் என்று பொருள் படும் . தன்னிலிருந்து விலகி நிற்பவர்க்கு அன்னியனாக நிற்கின்ற இறைவன் திருவடிகள் வெல்க என்கின்றார். விலகி நிற்பவர்க்கு அன்னியனாக நிற்கின்ற அவன் நெருங்கி வருவோர்க்கு நலன் புரிபவனாக இருக்கின்றான் என்கின்ற கருத்து உள்ளுள் மறைந்திரு ப்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வரியைப்படிக்கும்போது ஒரு திருவருட்பயன் ஞாபகத்திற்கு வருகின்றது.

**"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன் சலமிலன் பேர் சங்கரன்."**

என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். தன்னை வணங்கியவர்க்கு நல்லவனாகவும் மற்றவர்க்கு நல்லவன் அல்லாதவனாகவும் இருக்கின்ற இவன் எப்படி கடவுளாக இருக்க முடியும் என்கின்ற வினா எழுவதையும் நாம் காணலாம். இதற்கு என் நண்பர் அழகான ஒரு உதாரணம் கூறினார்.

*நல்ல வெய்யில்காலம் நன்றாக சடைத்து வளர்ந்த மரம் ஒன்று நிற்கின்றது. அதன் கீழே போனால் வெய்யிலின் வெம்மை தெரிவதில்லை. விட்டு விலகினாலோ அந்த நிழலின் குளிர்மை கிடைப்பதில்லை. எமக்கு நிழல் தேவை எனில் நாம் தானே மரத்தின் கீழ் செல்லவேண்டி உள்ளது. நாம் வெய்யிலில் நிற்கின்றோம் என்பதற்காக மரம் ஓடி வந்து நிழல் தருவதில்லையே! இதைப் போலவே இறைவனுடைய அருள் எமக்குத் தேவையெனில் நாம் தான் இறைவனிடம் போக வேண்டுமே ஒழிய அவன் வரப்போவதில்லை. இதனை வலியுறுத்தவே மாணிக்கவாசகர் புறத்தார்க்குச் சேயோன் என்று கூறினார்.*

## கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள்வெல்க

கைகூப்பித்தொழுவோருடைய உள்ளத்தை மகிழ்விக்கும் இறைவன் திரு வடிகள் வெல்க என்கின்றார் தொடர்ந்து

## சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

சிரம் குவித்து வணங்குபவர்களை ஓங்கச்செய்கின்ற இறைவன் மலரடிகள் வெல்க என்கின்றார்.

கரம்குவிப்பதற்கும் சிரம் தாழ்த்துவதற்கும் இடையில் வேறுபாட்டை உருவாக்குகின்றார் மாணிக்கவாசகர். கரம் கூப்பித்தொழுபவர்களை உள்ளம் மகிழச்செய்யும் அதே இறைவன் சிரம் தாழ்த்தி வணங்குபவர்களை ஓங்கச் செய்வதாக மாணிக்கவாசகர் கூறுகின்றார். சிரம் தாழ்த்துதல் என்பது சரணாகதி அடைதல் . நான் என்ற ஆணவத்தை அழித்து நீ தான் சகலதும் என்று இறைவனை அடைகின்ற தன்மை தான் சிரம் தாழ்த்துதல் ஆகும்.

முதல் ஐந்து அடிகளில் தன்னுடைய இறைவன் யார் என்று கூறி வாழ்த்துச் சொன்ன மாணிக்கவாசகர் வேகத்தைத் தடுக்கின்றவனும் பிறவித்தளையை அறுக்கி ன்றவனும் தூரத்தே நிற்பவர்க்கு அருள் வழங்காதவனும் கரம் குவிப்பவர்க்கு அருள்பவனும் சிரம் தாழ்த்துபவர்களை ஓங்குவிப்பவனுமாகிய தன் இறைவன் அவன் புரிகின்ற இப்பணிகளில் வெற்றி அடைய வேண்டும் என்று கூறுகின்றார். தொடர்ந்து

## ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!

இறைவன் திருவடிகள் போற்றி! தந்தையின் திருப்பாதங்கள் போற்றி!

## தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!

தேசு என்றால் ஒளி, தேசன் எனும்போது ஒளிமயமானவன் எனலாம். ஒளிமயமா னவனுடைய திருப்பாதங்கள் போற்றி. சிவபெருமானுடைய திருவடிகள் போற்றி என்றும்

## நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி !

மலன் என்றால் மாசுள்ளவன் என்றாகும். நிமலன் எனும்போது மாசற்றவன் எனக்கொள்ளலாம். அன்பு நிறைந்த வர்களிடம் வாழுகின்ற மாசற்றவன் திருவடிகள் போற்றி

## மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி!

மாயை ஆகிய பிறப்பினை அறுக்கின்ற மன்னனுடைய அடிகள் போற்றி

## சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

சீரார் என்று சொன்னால் புகழ் மிக்கவர் எனலாம்
பெருந்துறை என்றால் திருப்பெருந்துறையைக் குறிக்கும். புகழ் மிக்க திருப்பெருந்துறையில் உள்ள எங்கள் தேவன் உடைய திருவடிகள் போற்றி!

## ஆராத இன்பம் அருளுமலை போற்றி!

ஆராத என்றால் நுகரநுகர திகட்டாத என்று பொருள் கொள்ளலாம். நுகர நுகரத் திகட்டாத இன்பத்தினை அருளும் மறையை ஒத்த இறைவன் திருவடிகள் போற்றி

மூன்றாவது கட்டமாகிய இந்த ஆறு அடிகளில் மாணிக்கவாசகர் இன்னும் ஒரு படி மேலே செல்வதைக் காணலாம். முதலில் வாழ்த்தி பின்பு வெற்றிபெறக் கூறி இறுதியாக வணக்கம் செலுத்தி சிவனின் கதையை-சிவபுராணத்தை கூற ஆரம்பிக்கின்றார்.

(தொடரும்.....)

### சொல்லோவியம் 1 விடைகள்

**இடமிருந்து வலம்**


1. விநாயகன் 16. படி 19. கைலை 21. கதிரவன் 36. கலைமகள் 42. உமை 45. திரு 48. திரை 54. திருடல் 61. சிவபெருமான் 74. வேல் 93. தோடுடைய செவியன்.

**மேலிருந்து கீழ்**

1. வினைகள் 4. கருவறை 7. விடிகாலை 10. மலைகள் 36. கருடன் 38. மதி 39. கரை 45. திருமால் 54. திருவே
61. சிலந்தி 70. முருகன் 78. துறவி

( சொல்லோவியம் 1 க்கான சரியான விடை எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. அதனால் பரிசு எவருக்கும் வழங்கப்படவில்லை. ஆயினும் கிடைத்தவிடைகளுள் அதிக சொற்களைக் கண்டுபிடித்த செல்வி சிவதர்சினி சிவராசா பாராட்டுப் பெறுகிறார்.)

## சொல்லோவியம் 2



### இடமிருந்து வலம்

1. நடராசரின் பாதத்தின் கிழ் இருப்பவர்.
3. கந்தசட்டி, சிவராத்திரி, வெள்ளிக்கிழமை போன்ற தினங்களில் மேற்கொள்ளப்படுவது.
4. கோபுரத்திலுமிருக்கும். உங்கள் கைகளிலுமிருக்கும்.
7. கடவுளையும் ஆன்மாவையும் பிரிப்பது.
8. இறைவனுக்கு இல்லாதது.
10. இராவணனுக்கு இறைவனை மயக்க உதவியது.
12. பாட்டு எழுதாமலே பரிசு வாங்கிய புலவர்.
13. இதனை பெண்களின் முகத்துக்கு ஒப்பிடுவர்.
16. தமிழ்க் கடவுள்.
18. மங்கல மாதரின் முகத்திலுள்ளது.

### மேலிருந்து கீழ்

1. இறை பக்தி வருங்காலம்.
2. இதயக் கோயில், நடன மண்டபம்.
3. பாற்கடலில் வந்தது.
5. விநாயகனுக்கு இன்னொரு பெயர்.
6. குசேலரின் சொத்து.
8. இதை அடைவது ஆன்மாவின் குறிக்கோள்.
9. இறைவன், தொண்டர் முதலியோரின் கதைகளைச் சொல்வது.
10. முருகனின் மூன்று சக்திகளில் ஒன்று.
12. இது நீங்கில் சிவனே என்று இருக்க வேண்டியதுதான்.
14. முக்கியமான உற்சவத்தில் இது உண்டு.
15. சிவபெருமானை கூலிக்கு அமர்த்தியவர்.
17. ஞானசக்தி.


இச் சொல்லோவியத்தைப் பிரதி செய்து நிரப்பி பங்குனி 20ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். சரியான விடையை அனுப்பும் அதிஸ்டசாலிக்கு 3 வருடங்களுக்கான கலசம் அனுப்பி வைக்கப்படும்

# நாவலர் சைவக்காவலர்

-சாலினி-

தமிழ் கூறும் நல்லுலகில் புறச்சமய இருள் சூழ்ந்த வேளையிலே நாவலராம் அருட் சைவச் சூரியன் உதித்தது. அவ்விருள் அகன்றது. மக்களும் விழித்து எழுந்துள்ளனர்.

நம் சைவமதம் புராதன மதம். அதற்கு ஆபத்து நேர்ந்த போதெல்லாம் அவதார புருஷர்கள் தோன்றி அதனை வழிப்படுத்தினார்கள். வேதநெறிக்கு ஆபத்து வந்தபோது ஆதிசங்கரர் தோன்றி அதனை நிலை நிறுத்தினார். பரந்தெழுந்த சமண முதலாம் பரசமய இருள் நீக்க அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் அவதரித்தார்கள். புத்தசமய இருளினைப் போக்க மாணிக்க வாசகர் தோன்றினார். கிறிஸ்துவ மத இருளினைப் போக்க அவதாரம் செய்தவரே ஆறுமுகநாவலர். இதனால் இவர் ஐந்தாம் சமயக்குரவராகப் போற்றப்படுகின்றார்.



நாவலர் வாழ்ந்த காலம் நாடு நலிவுற்றகாலம். அந்நியர் படைபெடுப்பு அந்நியர் ஆட்சி அந்நியமொழி ஆதிக்கம் அந்நிய மதத் திணிப்பும் நிகழ்ந்த காலம். தீண்டாமையும் அடிமைமனப்பான்மையும் வறுமையும் மூடநம்பிக்கையும் தலைவிரித்து ஆடியகாலம். ஈழநாட்டின் மரபு வழிக் கல்வியும் , மேலை நாட்டின் நவீன கல்வியும் சங்கமித்தகாலம் இவ்விருவகைக் கல்விமுறைகளும் தந்த நலன்களை எல்லாம் தமதாக்கிக்கொண்டு ஈழநாட்டின் வரலாற்றின் திருப்பு முனையாக சமயப்பணிபுரிந்தவர் நாவலர்.

"நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே - எல்லவரும்
ஏத்து புராண ஆகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறிவெங்கே அறை"

என்பது சிறுப்பிட்டி வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் மதிப்பீடு.

வறுமை தீண்டாமை காரணமாக துன்பப்பட்ட மக்களை பாதிரிமார்கள் பணம் கொடுத்து மதம் மாற்றம் செய்தனர். கிறித்தவர்களாக மதம் மாறியோர் இலவசமாக ஆங்கிலம் கற்றனர். ஆங்கிலம் கற்றோர் உத்தியோகம் பெற்றனர். தாழ்த்தப்பட்டோர் வணங்கத்தக்கோருடன் படிக்கவும் உத்தியோகம் பார்க்கவும் வாய்ப்புப்பெற்றனர். இதனால் பெருவாரியான மக்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறினர். சைவம் வீழ்ச்சியடையக் கிறிஸ்துவமதம் பரவியது.

இந்நிலை நாவலர் உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்ச்சி அவரை சமஸ்கிருதம் கற்று வேத சிவாகமங்களை கற்கத்தூண்டியது. அப்பொழுது சைவசமயபோதனைக்கான சமயநூல்கள் தமிழில் இல்லாததையும் இருப்பனவும் ஒருசிலரிடம் ஏட்டுப்பிரதிகளாக முடங்கிக்கிடப்பதையும் கண்டார். பாதிரிமாரால் உண்டாக்கப்பட்ட கல்லூரிகளில் அவர்களின் சமயநூல்கள் கற்பிக்கப்படுவதையும் சைவசமயிகளால் உருவாக்கப்பட்ட கல்லூரிகளில் சைவசமய நூல்கள் கற்பிக்கப்படாததையும் அவதானித்தார். இவை அனைத்திற்கும் தாமே தனியொருவராக பரிகாரம் தேட முயன்றார். பீற்றர்பேர்சிவல் பாதிரியாருடைய ஆங்கிலக்கல்லூரியில் ஆங்கிலம் கற்று அங்கேயே ஆசிரியராகப்பணிபுரிந்து தமிழ் ஆங்கிலமாகிய இருமொழித் திறமையினால் பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்த நாவலர் பாதிரிமாரின் உத்திகளைக்கையாண்டு மதமாற்றத்தை தடைசெய்தார்.

முதலாவதாக அவர்களின் சமயப்பிரசாரத்தைப்பின்பற்றி எழுத்தறிவு இல்லாத மக்களுக்கு சமய அறிவைப் புகட்ட சைவப்பிரசாரத்தைத் தொடங்கினார். மக்கள் சைவசமய உண்மைகளை அறியாது கிறிஸ்தவ மதத்திற்கு மாறுகின்றார்கள் என்பதை உணர்ந்து சைவசமய உண்மைகளை பாமரரும் புரிந்துகொள்ளும் வண்ணம் 1847 ஆண்டு வண்ணார் பண்ணை வைதீஸ்வரன் கோவில் வசந்தமண்டபத்தில் தனது முதலாவது சைவசமயசொற்பொழிவை நிகழ்த்தினார்.

"கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாக அவரின் சொற்பொழிவு இருந்தது.

குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியுமா? எனவே நல்லொழுக்க நெறியில் தவறாது தெளிந்த அறிவு உள்ளவனே சமயப்பிரசாரம் செய்து மக்களை வழிப்படுத்த முடியும். அது நாவலரிடம் இருந்தது. சமயப்பிரசாரத்திற்கு காசோ பணமோ தேவையில்லை. கூட்டம் அதிகம் தேவையில்லை. மதநம்பிக்கையுள்ள ஒரு சிலர் இருந்தால் போதும் அது மீண்டும் வளர்ச்சி பெறும் என்பதனை நிகழ்த்திக்காட்டினார். தமது பிரசாரங்களில் சைவசமயம் யாரையும் வலிந்து

மதமாற்றம் செய்வதில்லை. மதம் மாறுவோருக்கு ஏனைய மதங்களைப் போல் தண்டனை வழங்குவது இல்லை அநியாயங்களையும் அவர்களின் துண்டுப்பிரச்சாரங்களில் இருந்த தவறுகளையும் கண்டித்தார்.

ஆலய நிர்வாகிகளின் குருமார்களின் சீர்கேடுகளையும் கண்டித்துத் திருத்தினார். சிவதீட்சை பெறாத வைதீகப் பிராமணர்கள் கையால் விபூதி வாங்குவதும் பூசை திருவிழாக்கள் செய்வதும் சிவாகம விரோதம் எனக் கூறினார். இதனால் வைதீகப்பிராமணர்கள் பலர் சிவதீட்சை பெற்று சிவாகம விதிப்படி நடக்கத்தொடங்கினார். இதனால் யாழ்ப்பாணத்தில் வைதீகமார்க்கம் குன்றியது. நல்லூர் கந்தசுவாமி கோயில் மூலத்தானத்தில் வேல் (ஞானசக்தி) பிரதிஷ்டை செய்யப்பட்டு இருபக்கங்களிலும் வள்ளி, தெய்வயானையை (இச்சாசக்தி, கிரியாசக்தி) வைத்து பூசை செய்வதும் சிவாகமவிதிக்குப் பொருந்தாது என எடுத்து க்காட்டினார். (ஞானசக்தியை நல்கும் முருகனின் திருவுருவை நீக்கி வழிப்படுதல் ) ஆனால் அதை கோயில் நிர்வாகிகண்டு கொள்ளவில்லை. இன்றும் அந்நிலை நீடிக்கின்றது.

இரண்டாவது உத்தியோக 1848ஆம் ஆண்டு வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடக்கினார். மூன்றாவது உத்தியாக அங்கு தமிழும் சமயமும் ஆங்கிலமும் இலவசமாக போதிக்க வழிவகுத்தார். வசதியற்ற குழந்தைகளுக்கு உணவு உடை வழங்கவும் ஏற்பாடு செய்தார். சிதம்பரத்தில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக வழிவகுத்தது என்றால் அது மிகையாகாது.

பாடசாலைகள் மட்டும் இருந்தால் போதுமா? படிக்க புத்தகங்கள் வேண்டாமா? எனவே நான்காவது உத்தியாக புத்தகங்களை அச்சடிக்க வித்தியாநூல் பரிபாலன யந்திரசாலை என்ற பெயரில் வண்ணார் பண்ணையிலும் சென்னையிலும் அச்சியந்திரசாலைகளை நிறுவினார். பாலபாடம், இலக்கணவினாவிடை, சைவவினாவிடை,பூமிசாத்திரம் என்பனவற்றைப் பாடப்புத்தகங்களாக வெளியிட்டார்.

இந்தியாவின் தேசிய மொழிகளிலேஅச்சேற்றப்பட்ட முதல்நூல் தமிழில் அதனை மொழிபெயர்த்த பெருமை நாவலருக்கு உண்டு. இன்று தமிழ்மொழி மிகப்பழமைவாய்ந்த நூல்களைக் கொண்டதாகவும் அதனால் உலகப்புகழ் பெற்றதாகவும் விளங்க நாவலர் மேற்கொண்ட அச்சுப்பதிப்பே காரணம். பனை ஓலை ஏட்டிலே இராமாயணத்திற்கும் கறையானுக்கும் இரையாகி அழியும் நிலையில் இருந்த ஏடுகளை தொகுத்து ஆராய்ந்து அச்சிற்பதித்து வெளியிடும் முயற்சியில் முன்னின்றவர் நாவலர். அதற்குப் பின் அவரது ஆசியோடும் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டவர் சி.வை தாமோதரம்பிள்ளை இவரே தமிழ்த்தாத்தா எனப் போற்றப்படும் உத்தமதானபுரம் வே சாமிநாதையருக்கு வழிகாட்டியாக இருந்தார். இம்மூவரையும் பழந்தமிழ் சைவநூல்களுக்குச் சாகாவரம் அளித்த மும்மூர்த்திகள் எனப்போற்றுவர்.

ஐந்தாவது உத்தியாக செய்யுள் நடையில் இருந்த சமய நூல்களை யாவரும் வாசித்து அறியும்படி வசனநடையில் எழுதினார். வசன நடை என்றால் இது எனக்காட்டியவர் நாவலர். தமிழில் குறியீடுகளை முதன்முதலில் புகுத்தியவரும் இவரே. அவரை வசனநடை கைவந்த வள்ளளார் என்று சூரிய நாராயண சாஸ்த்திரி சொன்னார். நாவலரின் வசனங்கள் தேவைக்குத்தக்கபடி வளைந்து கொடுக்கும். கண்டனத்திற்குக் கண்டனமாகவும் தர்க்கத்திற்குத் தர்க்கமாகவும் பக்திக்குப் பக்தியாகவும் அவை மாறும். அவரின் வசனநடையில் சொக்கிய நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

"அன்னநடை பிடியின்நடை அழகுநடை
அல்லன அகற்றி அந்நாள்
பன்னுமுது புலவரிடம் செய்யுள்நடை
பயின்ற தமிழ்ப் பாவையர்க்கு
வன்னநடை வசனநடை வழங்குநடை
எனப்பயிற்றி வைத்த ஆசான்
மன்னுமுயர் நாவலன்றன் அழியா
நல்லொழுக்க நடை வாழி!வாழி!"

என வாழ்த்துகின்றார். நாவலர் கந்தபுராண வசனம், பெரியபுராண வசனம், இலக்கணச்சுருக்கம், போன்ற நூல்களைத் தன் வசன நடையிலும் திருவாசகம் திருக்கோவையார் திருக்குறள் போன்றவற்றை அவற்றிற்குக் கிடைத்த உரையாடல்களுடன் வெளியிட்டார். இந்நூல்களை பார்த்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

"மன்னு பெருந் தமிழ்ப்பாடை இலக்கணமும்
இலக்கியமும் வரம்பு கண்டோன்
பன்னு சிவபுராணங்கள் பல தெரிந்தோன்
சிவாகம நூற்பரவை மூழ்கி
யுன்னு மநுபூதி என்னும் விலைவரம்பிலா
மணிகையுறக் கொண்டுள்ளான்.
மின்னு நற்குணத்தினனாய் சைவமெனும்
பயிர் வளர்க்கும் எழிலி போல்வான்"

என்ற செய்யுளில் நாவலரைச் சைவசமயப் பயிரை வளர்க்கும் மழை மேகம் என்று பாராட்டுகின்றார்.

கிறிஸ்தவர் போல் பஜனை செய்யும் முறையை ஆறாவது உத்தியாகப் புகுத்தினார். அதற்காக திருவாவடு துறை யிலிருந்து ஓதுவார் சிலரை அழைப்பித்தார். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவில் சுவாமி வீதிவலம் வரும் பொழுது சுவாமிக்குப் பின்னால் ஓதுவார்களைக் கொண்டு

தேவாரங்களை ஓதுவித்துக் கொண்டு வந்தார். அன்றிலிருந்தே அப்படி பஜனை செய்யும் வழக்கம் தொடங்கியது.

சைவமும் தமிழும் இணைபிரியாதன. சைவம் வளரும் போது கூடவே தமிழும் வளரும். இது நம் சைவத் தமிழ்ப் பெரியோர்கள் கண்ட உண்மை. இந்த உண்மைக்காக தன்னையே அர்ப்பணித்துக்கொண்டவர் நாவலர். தனியொரு மனிதனாற்கூட சமயத்திற்கும் மொழிக்கும் வளம் சேர்க்க முடியும் என்பதை நிரூபித்துக்காட்டினார். தன் பெயருக்கு ஏற்ப ஆறு உத்திகளைக் கையாண்டு சைவத்தமிழ் மக்களை காத்த மகாபுருஷர்.

ஈழநாட்டில் மட்டுமல்ல தமிழ் நாட்டுக்கும் அவர் ஆற்றிய பணிகள் தமிழக மக்களால் மறக்கற்பாலன அல்ல. இதனை சோமசுந்தரபாரதியார் என்றுமே தீர்க்கொணாதவாறு தமிழகத்தை ஈழநாட்டிற்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர் என்றால் மிகையாகாது என்கிறார்.

நாவலர் எதற்காகத் தம்மை இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டார் என்பதை 1868ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து எழுதிய விஞ்ஞாபனத்தில் கூறுகின்றார். நான் பீற்றர் பார்சிவல் வித்தியாசாலையில் ஆங்கிலம் கற்றேன். அவருக்கே தமிழ்ப்பண்டிதனாய் இருந்தேன்.என் தந்தை வழிச்சொத்தையோ என் தமயன்மாரிடம் இருந்து பொருளுதவியோ நான் பெறவில்லை. என் தொழிலையும் நான் பரித்தியாகம் செய்தேன். எனது ஆங்கிலக் கல்விக்கு நல்ல உத்தியோகம் கிடைக்கும் என்பதை அறிந்தும் அதனையும் நான் பெறவில்லை. எனது ஜென்மபூமியில் (யாழ்ப்பாணத்தில்) நாயகனிடம் இருந்து எதுவும் வாங்காது வீடு, விளைநிலம், ஆபரணம் ஆகியவற்றோடு கன்னியை விவாகம் செய்து கொடுக்கும் வழக்கம் இருந்தும் நான் இல்வாழ்க்கையில் புகவில்லை. இவை எல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதற்கு உதவியான கல்வியையும் வளர்க்க வேண்டும் என்னும் பேராசையே ஆகும்.....

தமக்கு கிடைக்க இருந்த இன்பங்களைத் துறந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார் நாவலர் என்பதனை அவரே கூறிப்போந்துள்ளார்.

நாவலரென்போம் சைவக்காவலர் என்பபோம்
நல்லவரென்போம் எல்லாம் வல்லவரென்போம்.

## எண்ணைகளின் வகைகள்

**நெய்:** தீபத்திற்கு நெய் விடுவது மிகச் சிறப்பு. சகலவித செல்வ சுகத்தையும் வீட்டில் நலனையும் தருகிறது.

**நல்ல எண்ணை:**

இதனால் எரிவதால் எல்லா பீடைகளும் விலகிவிடுகிறது.

## குறித்து வைக்கவேண்டிய விசேடதினங்கள்

15-01-95 தைப்பொங்கல்
16-01-95 பூரணை விரதம்
17-01-95 தைப்பூசம்
27-01-95 ஏகாதசிவிரதம்
28-01-95 சனிப்பிரதோஷ விரதம்
30-01-95 அமாவாசை விரதம்
03-02-95 சதுர்த்தி விரதம்
05-02-95 சஷ்டிவிரதம்
08-02-95 கார்த்திகை விரதம்
11-02-95 பீம ஏகாதசி
13-02-95 பிரதோஷ விரதம்
15-02-95 பூரணை விரதம்
16-02-95 மாசி மகம்
25-02-95 ஏகாதசி விரதம்
27-02-95 பிரதோஷம்-மகா சிவராத்திரி
01-03-95 அமாவாசை விரதம்
05-03-95 சதுர்த்தி விரதம்
07-03-95 சஷ்டிவிரதம், கார்த்திகை விரதம்
14-03-95 பிரதோஷ விரதம்
16-03-95 பூரணை விரதம்
17-03-95 பங்குனி உத்தரம்
27-03-95 ஏகாதசி விரதம்
28-03-95 பிரதோஷ விரதம்
30-03-95 அமாவாசை விரதம்
02-04-95 சௌபாக்கிய கௌரி விரதம்
03-04-95 கார்த்திகை விரதம்
04-04-95 சக்திகணபதி சதுர்த்தி விரதம்
06-04-95 சஷ்டி விரதம்
09-04-95 ஸ்ரீராம நவமி
11-04-95 ஏகாதசி விரதம்
13-04-95 பிரதோஷ விரதம்
14-04-95 யுவவருடப்பிறப்பு


தொகுப்பு:
அமுதா

# தமிழும் சைவமும் — இணைந்த வரலாறு

சைவத்தால் தமிழ் வளர்ந்தது, தமிழால் சைவம் வளர்ந்தது என்று பரவலாகச் சொல்லிக்கொள்வார்கள். பல்லவர் காலத்திற்குப் பிற்பட்டகாலத்து நிலைமையை வைத்துக்கொண்டு அவ்வாறு கூறுவது மரபாகிவிட்டது. வடக்கில் இருந்து வந்த பௌத்தமும் சமணமும் தென்னாட்டிற் சூறாவளியாகப் புயல் வீசியபோது நாயன்மார் தோன்றியமையாற் சைவசமயம் புத்தொளி பெற்றதென்றும், இந்தப் புத்தொளிக்குப் பாமாலை வடிவம் கொடுத்தபோது தேவாரம் என்ற பத்தித்தமிழ் வளர்ந்ததுஎன்றும்காரண காரியத்தொடர்பு கூறுவார்கள்வரலாறு அறிந்தவர்கள். இந்தவரலாற்று நிகழ்ச்சியை விவரிப்பதுஅல்ல இந்தக் கட்டுரையின்நோக்கம். சிவநெறித் தத்துவம் தமிழ் மொழியில் இலக்கணத்தில் எவ்வாறு இழையோடியுள்ளது என்பதைக் காட்டலே இந்த எழுத்தின் குறிக்கோள்.

சைவசமயத்தின் மூலைக்கற்கள் எவை என்று கேட்டால் அதற்கு மறுமொழியாகப் பின்வருவனவற்றைச் சொல்லலாம். கடவுள் உண்டு, அஃது அநாதியானது, உயிர்கள் உண்டு, அவை அநாதியானவை. பாசம் உண்டு, கன்மம் உண்டு, மறுபிறப்பு உண்டு. கன்மம் நீங்கப் பிறவி நீங்கும், பிறவி நீங்க உயிர் கடவுளின் அடியைச் சேர்ந்து

ஒன்றறக் கலக்கும். அந்தக்கடவுளின் அடியில் உயிரின் முடிசேர்ந்த நிலைக்கு அத்துவித நிலை என்று பெயர். கடவுளின் அடியைச் சேர்வதற்காகவே உயிர்கள் பிறப்பெடுக்கின்றன. இவை தான் சைவசமயத்தின் அடிப்படை நம்பிக்கைகள் அல்லது மூலைக்கற்கள். திருக்குறள் என்ற வாழ்க்கை நூலின் தொடக்கத்திற் கடவுள் வாழ்த்துக் கூறவந்த வள்ளுவரும் தமது சமயத்தைத் தமது மொழியாகிய தமிழோடு தொடுத்துப் பேசுகின்றார். 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு" என்று பேசுகின்றார். உலகத்திலுள்ள எழுத்துக்கள் எல்லாவற்றி ற்கும் 'அ' எழுத்து முதல் எழுத்தாகவும் மூல எழுத்தாகவும் இருப்பதுபோல உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாவற்றிற் கும் இறைவனே தலைவனாகவும் மூலவனாகவும் இருக்கின்றான் என்கின்றார் வள்ளுவ க்கடவுள். இறைவனின் சிறப்பை முறைப்படி உரைக்கவந்த உமாபதி சிவாச்சாரியார் என்ற மெஞ்ஞானியும் தமது திருவருட்பயன் என்ற நூலிலே 'அ' என்ற எழுத்து மற்றைய எல்லா எழுத்துக்களிலும் நிறைந்திருப்பது போல இறை என்ற பரம்பொருளும் உலகிலுள்ள உயிர்கள் எல்லாவற்றிலும் நிறைந்திருக்கின்றது என்று கூறித் தமிழ்மொழியைச் சைவசமயத்தோடு இணைக்கின்றார்.



எழுத்துக்களை உயிர் எழுத்துக்கள் என்றும், மெய் எழுத்துக்கள் என்றும், உயிர்மெய் எழுத்துக்கள் என்றும் பாகுபடுத்துவது தமிழ்மொழிக்கே உரிய தனிச்சிறப்பு. அதாவது சிவசமய தத்துவத்தைத் தமது மொழியிலுங் கண்டவர்கள் தமிழர்கள். மெய் எழுத்தும் உயிர் எழுத்தும் சேர்ந்த சேர்வைக்கு உயிர்மெய் எழுத்தென்று பெயர். இக்கன்னா 'க்' ஒரு மெய் எழுத்து ஆனா 'அ' ஒரு உயிரெழுத்து . மேற்படி மெய்யும் உயிரும் சேர்வதாற் பிறக்கின்ற 'க' உயிர்மெய் எழுத்து. மெய் எழுத்தும் உயிர் எழுத்தும் அல்லது உயிர் எழுத்தும் இன்னோர் உயிர் எழுத்தும் சேர்வதை இலக்கணத்திற் புணர்ச்சி என்பார்கள். ஆண் பெண் சேர்க்கைக்கும் அப்பெயர் உண்டு. ஒரு மெய் எழுத்தும் உயிர் எழுத்தும் சேரும்போது புணர்ச்சி இயல்பாகவே நிகழ்ந்துவிடுகின்றது. ஆனால் உயிரெழுத்தும் உயிரெழுத்தும் சேரும்போது புணர்ச்சி இயல்பாக நிகழ்வதில்லை. தமிழ் இலக்கணத்தில் (சிவசமய தத்துவத்திற் போலவே) ஓர் உயிர் மற்றோர் உயிரை நேரிடையாகச் சந்தித்துப் புணர்வதில்லை. ஓர் உயிர் எழுத்து இன்னோர் உயிர் எழுத்தோடு புணர வேண்டுமானால் அந்தச் செயலைச் செய்வதற்கு ஒரு தரகர் தேவைப்படுகின்றார். இந்தத் தரகர் இடைநின்று

கூட்டிவைத்தால் அன்றி இரண்டு உயிர் எழுத்துக்கள் ஒன்று சேரமாட்டா. இந்த இலக்கணத் தரகர் ஒரு மெய் எழுத்தாகவே இருப்பார். ஆனால் எல்லா மெய் எழுத்துக்களும் இந்தத் தரகர் வேலையைச் செய்ய முடியாது. தமிழில் உள்ள பதினெட்டு மெய் எழுத்து க்களில் இரண்டு மெய் எழுத்துக்கள் மட்டுமே இந்த வேலைக்கு உகந்தவர்கள். 'ய்', 'வ்' ஆகிய மெய்களே இந்தத் தரகர்கள். ஒட்டத் தயங்கும் உயிரெழுத்துக்களை ஒட்டவைக்க உதவுகின்ற இந்த இரண்டு மெய் எழுத்துக்களுக்கும் உடம்படுமெய் என்று பெயர். அதாவது கிட்டவராமல் எட்ட நிற்கின்ற உயிர் எழுத்துக்களை உடன்பாடு செய்து வைக்கின்ற மெய் எழுத்துக்கள் என்ற கருத்தில் அவை உடம்படுமெய் எனப்படுகின்றன . இலக்கணப்பயிற்சி இல்லாதவர்களுக்கு இந்த விளக்கம் சிரமம் தரக்கூடுமாதலால் இதனை உதாரணமூலம் விளங்க முயல்வோம்.

'சே' என்ற சொல்லையும் 'அடி' என்ற சொல்லையும் எடுத்துக்கொள்வோம். 'சே' என்ற சொல்லும் 'அடி' என்ற சொல்லும் சேர்ந்தால் அதன் விளைவாக வரும் கூட்டுச்சொல்லின் உருவம் எப்படி இருக்குமென்பதை எண்ணிப்பார்ப்போம். ஆராய்ச்சி இல்லாமலே நீங்கள் சேவடி என்று மறுமொழி கூறவும் கூடும். அப்படி நீங்கள் சொன்னால், வினாவுக்கு விடை அளித்துவிட்டீர்கள் என்பது உண்மைதான். ஆனால் நான் விளக்கவிளைகின்ற தத்துவம் விளங்கப்படாமற் போய்விடும். ஆகவே மேலும் விளங்க முயல்வோம்.

'சே' என்பது உயிர்மெய் எழுத்து. அதில் ச் + ஏ என்று இரண்டு எழுத்துக்கள் உள்ளன. ஆகவே 'சே' என்ற சொல்லும் 'அடி' என்ற சொல்லும் புணரும்போது உண்மையில் ஏ என்ற உயிரும் அ என்ற உயிருந்தான் புணரவேண்டிய எழுத்துக்கள். (ச் + ஏ + அ + ட் + இ) ஆனால் நான் முன்னே கூறியது போல 'ஏ' என்ற உயிரும் 'அ' என்ற உயிரும் இயல்பாகப் புணரமாட்டா. ஆகவே 'ஏ' யையும் 'அ' வையும் உடன்படுத்துவதற்காக 'வ்' என்ற மெய் எழுத்து இடையே தோன்றுகின்றது. அந்த உடம்படுமெய் இடையே தோன்றியதும் சமன்பாடு கீழ்க்கண்டவாறு

அமையும்.

சே + அடி

ச் + ஏ + அ + ட் + இ

ச் + ஏ + வ் + அ + ட் + இ = சேவடி

மேற்படி சமன்பாட்டில் 'வ்' என்ற மெய் எழுத்து உடம்படுமெய்யாக வந்ததைக் கண்டோம். ஆனால் 'வ்' என்ற மெய்க்குப் பதிலாக 'ய்' என்ற மெய்யும் உடம்படுமெய்யாக வரும். அப்போது 'சே' 'அடி' என்பது சேயடி என்று வரும்.

கோ + இல் என்பது கோவில் என்றும் கோயில் என்றும் வழங்கப்படுவது இந்த இலக்கணத்தின் அடிப்படையிலேயே.

தமிழ் இலக்கண விளக்கம் இவ்வளவில் நிற்கட்டும். நான் காட்ட நினைக்கும் சிவதத்துவத்தை இப்பொழுது பார்ப்போம். இறைவன் ஒருவன் உள்ளான். (அவன் ஆணல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல. உருவும் பெயரும் இல்லாத அந்தப்பரம்பொருளுக்கு மக்கள் உருவமும் பெயர்களும் கொடுத்து வழிபடுகின்றார்கள்.)உயிர்கள் பலவுள்ளன. பரம்பொருளும் அநாதி, உயிர்களும் அநாதி. உயிர்கள் பரம்பொருளாற் படைக்கப்படுவதில்லை. பரம்பொருள் குறைவற்றது. உயிர்கள் நிறைவற்றவை. உயிர்கள் நிறைவு பெறுவதற்காக இறைவன் அவற்றிற்கு உலகம் முதலியவற்றையும் பிறப்பையும் கொடுக்கின்றான். உயிர்கள் வினைப்படுகின்ற வரைக்கும் பிறப்புண்டு. பிறப்பறுக்கும் முயற்சியில் உயிர்களை ஈடுபடுத்துகின்றான் இறைவன். பற்றற்றுச் செயற்படுகின்ற நிலையில் உயிர்கள் பரம்பொருளைச் சென்றடைந்து ஒன்றுகின்றன. பரம்பொருளோடு ஒன்றுசேர்ந்து ஒன்றுவதற்காகவே உயிர்கள் உடம்பெடுக்கின்றன. அதாவது பிறப்பெடுக்கின்றன. உடம்பில்லாமற் சிற்றுயிராகிய சீவாத்மா வினையாற்றவும் முடியாது, பேருயிராகிய பேராத்மாவைச் சேரவும் முடியாது. இவைதான் சைவமத அடிப்படைகள். சிறிய உயிரான பசு பெரிய உயிரான பதியோடு கூடுவதற்கு உடம்பு தேவை என்பது எங்களுடைய சிவசமயக்கருத்து. வெறுமனே சமயக்கருத்தல்ல, ஆழமான கருத்து. சிற்றுயிர் பேருயிரோடு ஒன்றறக் கலக்கின்றதே ஒழிய ஒருபோதும் ஒன்றாவதில்லை. இந்த நிலையைத் திருவருட்பயன் நன்றே விளக்குகின்றது. ஒரு சூத்திரத்தில்

"தாடலைபோல் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ ஏகமெனக் கொள்."

'தாடலை' என்பது ஒரு சொல் போலத் தோன்றினாலும் அதில் தாள், தலை என்று இரண்டு சொற்கள் உள்ளன. உயிரும் பேருயிரும் கூடி நிற்கும் நிலை தாடலை போன்ற நிலை. உயிரும் பேருயிரும் ஒன்றாகிவிட்டது போலத்தோன்றும் நிலையே வீடுபேற்றுநிலை. இறைவனின் காலாகிய தாளில் உயிரின் தலை போய் ஒன்றுகின்ற நிலைதான் தாடலை என்ற மோட்சநிலை. மேற்படி சமயக்கருத்துத் தமிழ்மொழிக்கு அடிப்படையான இலக்கணத்தில் தொல்காப்பியருக்கு முந்திய காலத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றது என்பது வியப்புக்குரியது. இந்தத் தொடர்பும் உறவும் தற்செயல் என்று நான் நினைக்கவில்லை. பசு பதி பாசத் தொடர்புகள் பற்றிய கருத்துக்கள் வடநாட்டார் நமக்களித்த கருத்துக்கள் அல்ல. அவை பழந்தமிழரின் ஆராய்ந்த கருத்துக்கள் என்பதைத் தமிழரின் எழுத்துக்களே பறை சாற்றுகின்றன என்று எண்ணும்போது உள்ளம் பூரிக்கின்றது. இப்படியான தர்க்கரீதியான அறிவியல் சைவசமயத்தில் மூழ்கி மகிழாமல் வேற்றுமதச் சேற்றிலே சேறாடப்போவாரை என் சொல்ல?

**செ. சிறீக்கந்தராசா**

சாமியே சரணம் ஐயப்பா!

# சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

சிவஸ்ரீ நாகநாதசிவம்

**மா**யையில் உழலுகின்ற மனிதனுக்கு ஞானமார்க்கத்தின் முதற்படியாகத் திகழ்வது திருக்கோயில்கள். பல்வகைப்பட்ட மனிதர்களின் பக்குவ நிலைக்குத் தக்கவாறு பலவடிவ தெய்வச்சிலைகளும் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்து மத வழிகளில் பிரதானமான ஞானம், யோகம், கிரியை, சரியை இவற்றில் யோக மார்க்கத்தை நமக்குச் சுட்டிக்காட்டும் தெய்வ வடிவங்கள் பல உண்டு. சிவனின் தவக்கோலம், சயனித்த விஷ்ணு, யோகமாயை இந்த வரிசையில் மஹாசாஸ்தாவின் அம்சமான ஸ்ரீ ஐயப்ப சுவாமியும் அடங்குவர்.

பாரத நாட்டின் தென் கோடியில், கேரள நாட்டினுள் அடர்ந்த காட்டின் நடுவில் மனங்கவரும் இயற்கையான, கண்களுக்குக் குளிர்ச்சியான இடம் சபரிமலையாகும். ஸ்ரீராமனுக்கு நல்ல பழங்களை, தான் ருசிபார்த்து அளித்த சபரி அன்னையில் பெயரால் விளங்கி நிற்கும் இம்மலையிலேதான் சிவனுக்கும் மோகினி அவதார விஷ்ணுவுக்கும் ஹரிஹர புத்திரராகக் தோன்றிய மஹாநாஸ்தாவின் அம்சமான ஸ்ரீஐயப்பன் அமர்ந்து அருள் மழை பொழிகின்றார்.


எருமையின் குணம் கொண்ட மஹிஷி என்னும் அரக்கியின் தொல்லை தாங்காமல் மக்கள் வருந்த, பந்தள நாட்டு ராஜவம்சத்தில் அவதரித்துத் தாயின் வேண்டுகோளுக்காகப் புலிப்பாலையே கொணர்ந்தளித்து மஹிஷி சம்ஹாரம் செய்து அதனைத் தொடர்ந்து சபரிமலையிலேயே குக்குடாஸனமிட்டு அமர்ந்து, சின்முத்திரை காட்டி, நித்திய பிரம்மச்சாரியாய் நாடி வரும் பக்தர்களை ஆட்கொண்டு அருள் புரிகின்றார் ஸ்ரீ ஐயப்பன்.

கழுத்தில் மணியோடு பிறந்ததால் மணிகண்டனென்றும் சாஸ்தாவின் அம்சமானதால் ஹரிஹர புத்திரர் என்றும் ஐந்து மலைக்கு நடுவில் உள்ளதால் பஞ்சகிரீசன் என்றும் பல்வேறு நாமங்களில் அழைக்கப்படும் ஸ்ரீஐயப்பனின் விக்ரஹம் வேதகால மஹரிஷியாகிய பலராமராற் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பர். பல்வேறு காலகட்டத்தில் இடம் மாறி மாறி வந்த இந்த ஆலயத்தில் உள்ள பதினெட்டுப் படிகளுக்கு, சிறப்பான பூஜைகளும் மரியாதைகளும் செய்யப்படுகின்றன. பஞ்சபூதங்கள், கர்மேந்திரியம், ஞானேந்திரியம் இந்தப் பதினைந்தோடு மனம், புத்தி, அஹங்காரமாகிய பதினெட்டுத் தத்துவங்களைக் கடந்துதான் ஜோதியாகத் திகழும் ஸ்ரீ ஐயப்பனை அடைய முடியும் என்ற நோக்கோடு பக்தர்கள் இந்த படிகளைக் கடந்து இறைவனைத் தரிசித்து ஆனந்தமடைகின்றார்கள்.

முற்காலத்தில், பயங்கரமான காட்டுப்பாதையிற் சுமார் நாற்பத்தெட்டு மைல் நடந்து மிகவும் சிரமப்பட்டு யாத்திரை செய்து சபரி மலை சென்று வந்தார்கள். இடையிலே காட்டு மிருகங்களின் அபாயத்தைத் தவிர்ப்பதற்காகப் பல வண்ண வேஷ்டிகளைத் தரித்தும் ஸ்ரீஐயப்பன் நாமங்களை உரக்கச் சொல்லியும் வெடிகளை வெடித்துக்கொண்டும் போய் வந்தார்கள். தற்காலத்தில் வாகன வசதிகள் பெருகியிருந்தாலும் பம்பைக்கரையிலிருந்து ஏழு மைல் தூரம் நடந்து தான் சபரி மலை ஏறவேண்டும். அதேபோல் விரதம் இருக்காதவர்களும் இல்லற வாழ்க்கையிலுள்ள பெண்களும் மகிமை வாய்ந்த பதினெட்டுப் படிகளை ஏறமுடியாது.

சபரிமலை யாத்திரை செல்பவர்கள் கார்த்திகை மாதம் முதலாந் திகதி முதல் நாற்பத்தெட்டு நாட்கள் மாலையணிந்து விரதமிருக்கின்றார்கள். சபரிமலை புறப்படுமுன் குருசுவாமி உதவியுடன் இருமுடி எனப்படும் இரண்டு சிறிய மூடைகளில் பூசைச்சாமான்களையும் அங்கு தங்கும் நாட்களில் சாப்பாட்டிற்கான பொருட்களையும் முக்கியமாக ஸ்ரீஐயப்பன் அபிஷேகத்திற்கான நெய் நிரம்பிய தேங்காய்களையும் கட்டிக்கொண்டு சபரிமலை ஏறி, பதினெட்டாம் படிகளிலே தேங்காய் உடைத்து ஐயப்பனைத் தரிசித்து நெய் அபிஷேகம் செய்வித்துப் பிரசாதம் பெற்று ஊர் திரும்புகின்றார்கள். தைமாதம் முதலாந் திகதி, சபரிமலையில் மிக முக்கியமான நாள். அன்றைய தினம் இலட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் அங்கு கூடுவார்கள். அன்றைய தினம் விசேஷ நெய்யபிஷேகத்தோடு பிந்தள நாட்டிலிருந்து கொண்டு வரப்படும் விலை மதிப்பற்ற திருவாபரண நகைகள் சாத்தப்பட்டுப் பூஜைகள் நடைபெறும். அன்று மாலை ஆறு மணி அளவில் சபரிமலைக்கு எதிரிலுள்ள சாந்தமலையிலே தோன்றும் ஜோதியைத் தரிசிப்பது மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதையே மகரஜோதி தரிசனம் என்று சொல்கிறார்கள்.

ஸ்ரீஐயப்பனின் மண்டல பூசையும் மகாஜோதி தரிசனமும், லண்டனில் ஈஸ்ட்ஹாம் ஸ்ரீமுருகன் கோயிலில் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நாமும் ஸ்ரீ ஐயப்பனைத் தரிசித்து வாழ்க்கையில் அமைதியையும் ஆனந்தத்தையும் அடைவோமாக. சாமியே சரணம் ஐயப்பா!



# பக்தனும் பகவானும்

-திரு. மு. அழகப்பன்-

பக்தன் வாழ்க்கை அலுவல்களைக் கவனியாமல் விட்டுவிடமாட்டான். கவலையின்றி, வருத்தமின்றிச் செய்ய வேண்டியதை எல்லாம் முறையாகச் செய்துகொண்டே போவான். ஆனால் அந்தராத்மாவில் பகவானை– ஆண்டவனை வைத்துக்கொண்டே எல்லாம் செய்வான். மறந்துபோனபோது உடனே நினைவுக்குக் கொண்டு வருவான். அன்றாட வைதிக கர்மங்களைக் கூட அவ்வளவாக மதிக்கமாட்டான். சாந்நித்தியத்தை அப்பியாசம் செய்கிறவனுக்கு ஜபமும் மந்திரமும் வேண்டியதேயில்லை. சாதனங்களின் பயனை அடைந்தவன் சாதனத்தை ஏன் கட்டிக்கொண்டு அலையவேண்டும்.

ஆண்டவன் நம்மை அதிகம் கேட்கவில்லை. அவ்வப்போது அவனை நினைவுக்குத் தந்துகொண்டாற் போதும். அவ்வப்போது அவனுக்கு வணக்கம் செலுத்தினாற் போதும். கவலைகள் உண்டானபோது மட்டுமன்றி எல்லாநேரமும் அவன் அருளுக்காக இறைஞ்சவேண்டும். கஷ்டம் அனுபவிக்கும்போது ஐயனே! இதை உனக்காகப் பொறுக்கிறேன். இப்பாரத்தை நீயே ஏற்றுக்கொள்வாயாக! என்று துன்பத்திலும் இன்பங்காண ஆண்டவனை நாடவேண்டும். சுகம் நேர்ந்தால், பகவானை மறந்து விடுவதே பலர் பழக்கம். சுகத்திலும் அவனைத் தியானித்து அடைந்த சுகத்திற்கு நன்றி செலுத்த வேண்டியது கடமை. துன்பத்திலும் இன்பத்திலும் ஆண்டவனை அடிமனதில் இருத்திப்பழகுவதுதான் தியானம். நண்பர்களுடன் கலந்துறவாடி மகிழும்போதும் உணவருந்தும்போதும்,

இன்றெனக்கருளி இனிய உணவதனை இன்புற அளித்தனை ஈசா

இன்றுபோல் என்றும் எப்பாரும் யாவர்க்கும் இவ்வுணவை இனிது அருள்வாய் இறைவா கச்சி ஏகம்பனே"

என்று ஆண்டவனைத் துதித்து அண்டம் முழுதும் வாழுகின்ற அனைத்து மக்களும் அகமகிழ்ந்து உண்டு களிக்க ஆண்டவன் அருளை வேண்டி நிற்க வேண்டும். பிரார்த்தனையின் பொழுது "ஆ", "ஓ" என்று கதறிக்கூப்பிட வேண்டியதில்லை. ஆண்டவன் அருகிலேயே இருக்கின்றான். தூரத்தில் இல்லை. மிக அண்மையில் எப்போதுமே இருக்கின்றான். பெரிய மதிற்சுவர் சூழ்ந்த கோயிலில் அவன் இல்லை. உள்ளத்திலேயே சதாகாலமும் இருந்து வருகின்றான். உள்ளமே சிறு கோயில் . வேறு எங்கேயும் தேடிப்போக வேண்டியதில்லை.

ஓடிஓடி ஓடிஓடி உட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களுங்க ழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி எண்ணிறந்த கோடியே!.

–சிவவாக்கிய சித்தர்–

## பரம்பொருளை அறிய முடியுமா?

ஓர் அரசனுக்கு திடீரென்று ஆசை ஏற்பட்டது. இந்தப் பிரபஞ்சத்தை உண்டாக்கி இயக்குகின்ற பிரம்மத்தை அறிய வேண்டுமென்பதே அந்த ஆசை. பிரம்மத்தை பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்லுபவர்களுக்குத் தக்க பரிசுகள் வழங்கப்படுமென்று மந்திரியிடம் கூறி எல்லா இடங்களிலும் அறிவிப்புச் செய்வித்தான்.

பல வேதாந்திகள் ஒன்று கூடி அவனுக்கு விளக்க முயன்றனர். முடியவில்லை. மன்னன் முயற்சியைக் கைவிடவில்லை. ஒரு நாள் கடற்கரையில் உலாவும்போது ஒரு காட்சி அவனைக் கவர்ந்தது. ஒரு சிறுவன் கையில் சிறு பாத்திரமொன்றை வைத்திருந்தான். கடலில் இறங்கி அப்பாத்திரத்தால் தண்ணீரை முகர்ந்து கரைக்கு வந்து ஊற்றினான். மீண்டும் கடலில் சென்று தண்ணீரை முகர்ந்து தரையில் ஊற்றினான். அலுக்காமல் சலிக்காமல் இப்படியே செய்தான். வியப்படைந்த அரசன் அவனைக் கூப்பிட்டு "எதற்காக இப்படிச் செய்கின்றாய்?" என்று கேட்டான். "எப்படியாவது இந்தக் கடலை தண்ணீர் இல்லாமல் வற்றச் செய்ய வேண்டும். அதற்காகத் தான் இப்படிச் செய்கின்றேன்" என்றான். உனக்கென்ன பைத்தியமா? இந்தக் கடலிலே எவ்வளவு நீர் இருக்கின்றது. அதனை இந்தச் சிறு பாத்திரத்தால் இறைக்கமுடியுமா? என்று கேட்டான் அரசன். "அரசே! மன்னிக்க வேண்டும். இந்தக் காரியம் என்னால் முடியும் என்கின்ற நம்பிக்கையே உங்களால் தான் வந்தது" என்றான். "என்னாலா என்ன சொல்கின்றாய்" என்று அரசன் கேட்டான்.

"ஆம்! அரசே இந்தப்பிரபஞ்சத்திலுள்ள பல கோடி உயிர்களில் சிறு பொறியாகிய நீங்கள் பரம்பொருளைப்பற்றி அறிந்துவிடமுடியும் என்று முயற்சிக்கின்றீர்களே! அது முடியுமென்றால் நான் செய்யும் காரியமும் முடியும். அரசன் அப்படியே மலைத்துநின்றுவிட்டான்.

# கலசம் வாசகர்களுக்கோர்

# அரிய சந்தர்ப்பம்!

# கட்டுரைப்போட்டி

**1ம் பரிசு - 25 பவுண்கள்** **2ம் பரிசு - 20 பவுண்கள்**

**3ம் பரிசு - 15 பவுண்கள்**

சமய சம்பந்தமான தலைப்பில் புல்ஸ்காப் தாளில் 4 பக்கம் முதல் 8 பக்கம் வரை உங்கள் கட்டுரைகளை எழுதி அனுப்பும்படி வேண்டுகிறோம். முதல் மூன்று கட்டுரைகளுக்கு கலசம் 10 வது இதழ் வெளியீட்டு விழாவின்போது பரிசுகள் வழங்கப்படும். பரிசு பெறாத தரமான கட்டுரைகள் கலசத்தில் பிரசுரிக்கப்படும்.

**கிடைக்க வேண்டிய திகதி: 05-03.95**

# முத்தமிழ் விழா

# கலசம் 10 வது

# வெளியீட்டையொட்டி

# நாமெடுக்கும்


# மாபெரும் விழா!

# காலம்:

# 25-03-95

**விபரங்களை எதிர்பாருங்கள்!!**

# வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர்



அன்பு, அடக்கம், பணிவு, பண்பு, எப்பொழுதும் புன்னகை, எதிலும் விருப்பு வெறுப்பற்ற போக்கு, கடமையுணர்வு, கணமும் சும்மாவிருக்காத சுறுசுறுப்பு. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்தால் நம் மனக்கண் முன் தோன்றும் மனித உருவம் தான் அண்மையில் அமரராகிவிட்ட திரு இரத்தினசபாபதி அவர்கள்.

இலண்டன் ஸ்ரீமுருகன் கோயிலில் அல்லும் பகலும் அடிக்கடி காணக்கூடிய இம்மனிதர் எதிர்பாராத விதமாக அமரராகிவிட்டார் என்ற செய்தியை வானவில் வானொலியிலே கேட்டபோது ஒரு கணம் என் இதயமே நின்று விட்டது போன்ற ஒரு பிரமை. அன்புக்கும் அடக்கத்துக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும் ஒரு மனிதரை அவ்வளவு அவசரமாக ஆண்டவன் அழைத்துக்கொண்டாரா? என்று மனதில் ஒரு கேள்வி.

மனம் அன்னாரை நினைத்து மெல்ல அசைபோடுகின்றது.

ஸ்ரீமுருகன் கோயில் போகும் பக்தர்களில் இவரைத் தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள். எப்போது போனாலும் இம்மனிதர் ஏதாவது தொண்டு செய்துகொண்டிரு ப்பதைப் பார்க்கலாம். விளக்குக் கொழுத்துவார் அல்லது வீதியிலே வரும் வாகனங்களை வழிப்படுத்துவார், பக்தருக்குப் பிரசாதம் வழங்குவார் அல்லது பக்தர்களில் தமக்குத் தெரிந்தோர் தெரியாதோர் என்ற பேதமின்றி அனைவரையும் அன்புடன் விசாரிப்பார், கோயில் கருமங்களுக்கு துணை நிற்பார். இப்படி எத்தனை எத்தனையோ. பார்ப்போருக்கு மிகச்சாதாரணமாகத் தோன்றும் இம்மனிதர் விமானப்படையில் பணிபுரிந்தவர் என்றோ ,தமிழ் நாட்டிலே பிறந்து சிங்கையில் வளர்ந்து பின் இலண்டன் வந்து வாழ்ந்தவர் என்றோ பலருக்குத் தெரியாது.

பானை சோறானாலும் பதம் பார்ப்பது பருக்கை ஒன்றைத்தான். இதோ இரத்தினசபாபதி அவர்களின் நற்குணத்திற்கு நான் கண்ட இரண்டு உதாரணங்கள். ஒருநாள் அன்பர் ஒருவர் வழிபாடு முடிந்து அவசரமாகப் போகப் புறப்பட்டார். பிரசாதம் வழங்க தொடங்காததினால் அவர் பிரசாதம் வாங்கவில்லை. உடனே இதைக்கண்டு அவருக்கு ஒரு தட்டிலே சிறிது பிரசாதம் எடுத்து வந்து வழங்கியவர் வேறு யாருமல்ல, திரு இரத்தினசபாபதி அவர்களே! இன்னொரு நாள் அமைதியான வேளை தயிர் வரும் பிளாஸ்டிக்டப்பாக்களை கழுவிக் கொண்டிருந்தார். அவரின் செயலை வினாவியதற்கு அவர் அளித்த விடை மீதமாகும் பிரசாதம் வீணாகாமல் போட்டுக்கொடுக்க அவை உதவும் என்பது தான். எதையும் வீணாக்கக்கூடாது என்ற பண் பையும் அனைவருக்கும் பிரசாதம் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ண த்தையும் அவரின் பல நற்குணங்களுள் இரண்டாக நான் கண்டேன். இன்னும் எத்தனையோ எழுதலாம்.

இறைபக்தியில் அவருக்கு நிகர் அவரே தான். அண்மையில் கைலைக்கு சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள் அவர்களோடு யாத்திரை செய்து வந்ததை பலரும் அறிவார்கள். எந்தக்கால நிலையிலும் வெய்யில், மழை, பனி, என்று பாராது கோயில் வந்து வழிபடுவார்.

கோயில் தருமகர்த்தா சபையில் மற்றவர்களுக்கு கடமையுணர்வைத் தூண்டும் ஒரு தூண்டு கோலாக இருந்தவர் திரு இரத்தினசபாபதி அவர்கள். அடியார்க்கு அடியராகி எளியருக்கு எளியராகி நால்வர் நெறி நின்று வாழ்ந்து இந்த நல் மனிதர் கோயில் தவிர ஏனைய சைவசமய விழாக்களிலும் பங்கு கொள்ள தவறியதில்லை. சைவமுன்னேற்றச் சங்க விழாக்களில் இவர் பங்கு கொள்ளாத விழா எதுவும் இல்லை என்றே சொல்லலாம். அத்தனை கடமையுணர்வு அவருக்கு.

தொண்டு செய்வதை ஆத்மீக உணர்வோடு செய்துவந்த திரு இரத்தினசபாபதி என்றால் மிகையாகாது. தமது தாய்நாட்டிலே ஆசிரமமொன்று அமைத்து தொண்டாற்ற வேண்டுமென்பது இவர் பேரவா. அதற்காக மத்திய கிழக்கு நாடொன்றிலே வேலைபார்த்து (மற்றவர்களிடம் யாசகம் செய்யாது ) பொருள் திரட்ட வேண்டுமென்று அரபு மொழி பயில ஆரம்பித்தார். அன்னாரின் ஆவல் நிறைவேறு முன் ஆண்டவன் அவரைத் தனதாக்கிக் கொண்டான். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வழி நின்று தொண்டாற்றிய இம்மனித தெய்வத்தை ,மக்கள் சேவை போதும் இன் என்னோடு வந்து எனக்கு சேவை செய் என்று இறைவன் அழைத்ததில் வியப்பேதுமில்லை. இறந்தும் இறவாதவராக எம்மிடை இருக்கும் திரு இரத்தினசபாபதி அவர்களை , அவன் அருளால் அவன் தாள் வணங்கி அவனடி அடைந்த அன்னாரை அஞ்சலி செய்து நிற்கின்றோம்.

**க.ஜெகதீஸ்வரன்**

# பணிவு

சுவையான சம்பவம் ஒன்று பணிவின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் நயம்பட உரைக்கின்றது. கம்பர், ஒட்டக்கூத்தர் போன்ற பெரும்புலவர்களின் புலமையினால் சிறப்புறத் திகழ்ந்த சோழமன்னன் அவையினில் ஒருமுறை ," கம்பரை வெல்ல யார்?" எனச் சூழுரைத்தான். இக்கூற்று அவையின்கண் அமர்ந்திருந்த ஔவையாரைச் சினங் கொள்ள வைத்தது. ஔவையாரும் மன்னனை நோக்கி, "சோழனே!, பெண்கள் இல்லங்களிலே கிளி வளர்ப்பார்கள். அதற்குப் பாலும் பழமும் ஊட்டி, பேசவுங் கற்றுத்தருவார்கள். கிளியும் ஓரிரு சொற்களைப் பேசக் கற்றுக்கொண்டு அவர்களை இன்புறச் செய்யும் . ஒன்றிரண்டு சொற்களை அறிந்த கிளி தனக்கு எல்லாமே தெரிந்தது போல வெட்கத்தை விட்டு, தன் அறியாமையை உணராது பேசிக்கொண்டிருக்கும் . ஆனால் அவ்விடத்தே பூனை ஒன்று வருகின்றது என வைத்துக்கொள்வோம். கிளியின் பேச்சு அறவே நின்றுவிடும். தன் நிலைமை அப்போதுதான் கிளிக்குப் புலப்படும். தன் பேச்சே பூனையை அங்கே வரவழைத்தது என அதற்குப் புரியும். உடனே தன் இயல்பான குணம் வெளிப்பட, கீச்சுக்கீச்சு என உயிருக்குப் பயந்து கதறத்தொடங்கிவிடும்.

கல்வியின் சிறப்பே அடக்கத்திலே தான் உண்டு. இதனை அறியாமற் சிலர் தம் மனம் போன போக்கிற் பேசுகின்றனர். இது அவர்களின் அறியாமையை உணர்த்துகின்றது. கற்றோர் அவையின்முன் பணிவு வேண்டும். பணிவின்றிப் பேசினால் வருவது இழிவு தான். இதனை அறிவாயாக!"என்று கூறினார் .

**காணாமல் வேணதெல்லாம் கத்தலாம் கற்றோர்முன்**
**கோணாமல் வாய்திறக்கக் கூடாதே- நாணாமல்**
**பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்**
**கீச்சுக்கீச் சென்னும் கிளி.**

கம்பர் அசந்துபோனார். சோழன் மௌனியானான். அவையோ ஆரவாரித்து ஔவையைப் பாராட்டியது. கற்றறிந்த அறிஞர்கள் அற்ற இடத்தில் அரைகுறை அறிவுடையோர் தாம் விரும்பியபடி கூச்சல்போடலாம். ஆனால் அறிஞர்கள்முன் யாரும் பணிவின்றிப் பேசுதல் நன்றன்று என்ற கருத்தை மேற்கண்ட ஔவையின் பாடல் நமக்குப் புலப்படுத்துகின்றது.

பண்பட்டவர்களிடம் முனைந்து நிற்கும் பண்புகளிற் பணிவும் ஒன்றாகும். சகல பண்புகளுக்கும் இது ஒரு சிகரம் போன்றது என்றால் மிகையாகாது. படித்தவராகிலும் பாமரராகிலும் இப்பண்பு ஒன்றுமட்டும் இருந்துவிட்டால் அவரைக் குணமென்னும் குன்றேறி நிற்கச்செய்யும். பணிவு என்றால் அடக்கம் என்று பொருள்படும். அடக்கம் வேறு. அடங்கி நடப்பது வேறு. எதற்கும் அடங்கிநடக்கும் கோழைத்தன்மை பணிவன்று. கல்வி, செல்வம், வீரம் என்பனவற்றால் வரும் அகங்காரம் நீங்கியுள்ள தன்மையே அடக்கமாகும்.

விமால் பூபாலசிங்கம்

பதவி வரும்பொழுது பணிவு வரவேண்டும். புலமை மிக்க கல்விமான்கள் பலர் அடக்கமெனும் அருங்குணம் இல்லாமையாற் சரித்திரத்திலே தங்கள் பெயர்கள் இடம்பெறாமற் போன சம்பவங்கள் பலவுண்டு. அடக்கம் அமரருள் உய்க்கும் என்கின்றார்கள் சான்றோர்கள்.

பணிந்துவாழ்தல் எல்லோர்க்கும் நல்லதாகும். அப்படிப்பட்டவர்களுக்குள்ளும் செல்வந்தர்களுக்கு பணிவு இருந்துவிட்டால் மேலும் ஒரு செல்வம் சேர்ந்தது போன்று சிறப்புடைத்தாகும் என்கிறார் வள்ளுவர்.

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

இறைவனைத் தொழுதலை, வணங்கும் முறையை, பாடிப் பணிமனமே என்று பெரியோர்கள் அழகுறச் சொல்வதிலிருந்து பணிவின் சிறப்பும் உயர்ச்சியும் நன்றாக வெளிப்படுகின்றன.

**கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்**
**பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்**
**வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்**
**போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே**
**-சம்பந்தர்-**

# அறம்பல புரியும் அன்புத்தாய்

அநுராதா

நாவலர் என்றால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், பண்டிதமணி என்றால் பண்டிதமணி திரு கணபதிப்பிள்ளை அவர்கள்



நினைவுக்கு வருவது போலப் பண்டிதை என்றால் நினைவுக்கு வருபவர்தான் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பா க்குட்டி அவர்கள். அவ்வளவுக்குத் தமது தொண்டாலும் அன்பினாலும் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துக்கொண்டவர் பண்டிதை அவர்கள். சாந்தம், அடக்கம், அன்பு, அரவணைப்பு, ஒப்புரவு ஆகியவையே இவரது அணிகலன்கள். எளிமையும் இன்முகமும் இவரது முத்திரைகள். தனக்கென வாழாது பிறர்க்கென வாழுந் தன்மை இவரின் குணச்சிறப்பு.

ஆசிரியையாகத் தெல்லிப்பளையிற் பணியாற்றிய பண்டிதையவர்கள் தமது சமயச் சொற்பொழிவுகளால் மெல்ல மெல்ல மக்கள் மனதில் இடம் பிடிக்க ஆரம்பித்தார். இறைவழிபாட்டின் இன்றியமையாமை பற்றிய இவரது சொற்பொழிவுகள் நடைபெறாத சமய அரங்குகள் இல்லையெனும் அளவுக்கு ஈழம் முழுவதும் இடம்பெற்றது. பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள் மூலம் சமய அறிவை இவர்கள் பலரிடைவும் பரப்பினார்கள் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்தும் அறிஞர்களை வருவித்துக் கருத்தரங்குகள் நிகழ்த்தியுள்ளார்கள் பண்டிதை அவர்கள். அதுதவிரத் தாமும் சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து என்று பல நாடுகளுக்குஞ் சென்று சமயச் சொற்பொழிவுகள் ஆற்றிவுள்ளார்கள். இதனால் இவர்களுக்குப் பெயரும் புகழும் குவிந்தன.

இவையெல்லாம் படித்தவர் எவரும் செய்துவிடக்கூடிய, சாதித்துவிடக்கூடிய விடயங்கள்தான். பண்டிதையோ இவையெல்லாவற்றையுங் கடந்து மேலே ஒருபடி சென்றவர் என்பதே அவரின் தனிச்சிறப்பு. தெல்லிப்பளையிற் பல வருடங்களாகப் பரிபாலனம் ஏதும் இன்றி இருந்த ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தைத் தெல்லிப்பளை மக்களின் உதவியோடு இன்று பலருக்கும் அருள் அளிக்கும் புண்ணிய ஆலயமாகப் பரிணமிக்கச் செய்த பெருமை பண்டிதை அவர்களையே சாரும். ஆனால் இதைக் குறிப்பிட்டாலோ அடக்கமாகத் தேவியின் செயல் என்றுவிடுவார். ஆலயத்தைச் சிறப்புற அமைத்ததோடு அமையாது அங்குள்ள இளைய தலைமுறையை இறைத்தொண்டுகயில் ஈடுபடுத்தி இறைத்தொண்டின் ஒருபகுதி மக்கள் சேவை என்பதை மனதிலே பதிய வைத்தவர் பண்டிதை அவர்கள். அவரின் அந்தச் செயலால் இன்று அனாதைகள், விதவைகள், ஏழைகள் எனப் பலரும் பயனடைந்து வருகிறார்கள். கடந்த சில ஆண்டுகளாகப் போரினாலும் பூசல்களினாலும் இன்னலுறும் தமிழ் இளைஞர்கள் ஏராளம். அரசின் அச்சுறுத்தல்களால் அல்லலுற்ற அவர்களது குடும்பங்கள் பண்டிதை மூலம் பயனடைந்துள்ளன.


இவ்வாண்டு பண்டிதை அவர்கள் தமது எழுபதாம் பருவத்தை அடைகின்றார்கள் என்று அறிகிறோம். அன்னார் மேலும் பல்லாண்டு வாழவேண்டும், பலர் இந்தக் கற்பகதருவாற் பயனடையவேண்டும் என்பதே எமது பேரவா. அதற்காகச் சைவமுன்னேற்றச் சங்க ஆட்சிக்குழுவும் கலசம் ஆசிரியர் குழுவும் அன்னாரை வாழ்த்துகிறது, அவரது அறவாழ்வு நீடிக்க இறைவனை இறைஞ்சுகிறது.

## கந்தகோட்டம் முருகன் வரலாறு

சென்னையில் உள்ள கந்த கோட்டம் முருகன் கோவில் வரலாறு, கவிதை வடிவில் அமைக்கப்பட்டு ஒலிநாடாவாக வெளியி டப்பட்டுள்ளது. 21 பாடல்கள் அடங்கிய இந்த ஒலிநாடா 2 பகுதிகளைக் கொண்டது. பாடல்களை கவிஞர் தஞ்சை வாணன் எழுதியுள்ளார். எம்.எஸ் விஸ்வநாதன் இசை அமைத்து ள்ளார்.சினிமாப் பின்னணிப் பாடகர்கள் சீர்காழி சிவசிதம்பரம் , கிருஷ்ணராஜ், சுனந்தா, எல் ஆர் ஈஸ்வரி, டி.கே கலா ஆகியோர் பாடியுள்ளனர். சுகி சிவம் இணைப்புரை வழங்கியுள்ளார். கந்த கோட்டம் ஓர் இசைச்சித்திரம் என்ற பெயரில் இந்த ஒலிநாடா வெளியிடப்பட்டுள்ளது. இதன் வெளியீட்டு விழாவுக்கு உச்ச நீதிமன்ற நீதிபதி சிங்காரவேலு வெளியிட அற நிலையத்துறை இயக்குனர் இராமகிருஷ்ணன் முதல் ஒலி நாடாவைப் பெற்றுக் கொண்டார். கோவில்மூத்த அறங்காவலர் அனைவரையும் வரவேற்றார்.

# இந்துசமயம்

கிபி. 500– கிபி1900 வரை இக்காலப்பகுதியை மத்திய காலம் என்பர்.







முருகன்

முந்திய காலப்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட பல பெருமுயற்சிகள் மத்திய காலத்தில் பரந்து செழிப்படைந்தன. பக்தி இயக்கம் தோன்றியமை, வேதாந்தம் தத்துவரீதியாக விருத்தியடைந்தமை, தமிழருக்கே உரித்தான சைவசித்தாந்தம் தோன்றியமை, கடவுள் நம்பிக்கையின் பரிணாமமாகத் தோற்றிய மூன்று முக்கிய நீரோட்டங்களும் வேறுபாடடைந்து விருத்தியடைந்தமை, இக்காலப் பகுதியில் கருத்தில் ஏற்கவேண்டியவை.

கடைச்சங்க காலம் சங்கம் மருவிய காலப்பகுதியில் பௌத்தமும், சமணமும் தென் இந்தியாவிற் பரவியிருந்தன. அப்போது ஆட்சிசெய்த அரசர்களும் அச்சமயங்களைத் தழுவியிருந்தனர். அவற்றிற்கு ஆதரவு நல்கினர். மதமாற்றம் தொடர்ந்தது. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது எக்காலத்திற்கும் பொருந்தும். தற்காலத்தில் அரசன் என்பதற்கு அரசு என்று பொருள் கொள்ள வேண்டும். மேலும் இக்கால கட்டத்தில் சாதி முறை பல்கிப் பெருகியிருந்தமையாலும் கோவிலில் மக்களுக்கெட்டாத பாஷையாகிய சமஸ்கிருதத்தில் வழிபாடு நடந்தபடியாலும் மக்களிடையே சமய ஈடுபாடு குறைந்திருந்தது. பௌத்தமும் சமணமும் சாதி முறையையும் சமயச் சடங்கு முறைகளையும் எதிர்த்தன. ஏற்றத்தாழ்வகளைக் கற்பிக்காத சமயங்கள் ஒதுக்கப்பட்ட மக்களைக் கவர்ந்தது ஆச்சரியமல்ல. இதனால் இந்து சமயம் மிகவும் பாதிப்படைந்தது.

கடவுளை அடைவதற்குரிய வழிகளில் மூன்று வகைகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இவை ஞானயோகம்; கருமயோகம், பக்தியோகம் என்பன. யோகம் என்ற சொல்லுக்கு இறைவனோடு இணைதலும் அதற்கான வழியும் என்பது பொருள். ஞானயோகம் அறிவு வழியாகும். கருமயோகம் என்பது தன்னலங்கருதாத உழைப்பின் வழி. பக்தி யோகம் என்பது இறைவனிடம் தனியாக ஈடுபட்டுச் செல்லும் வழி. ஞானயோகம் அறிவுள்ள மக்களுக்கு மட்டும் ஏற்புடையது. மற்றையோருக்கு வேதாந்த சாத்திரத்தின் சிக்கல்களும் தத்துவக் கருத்துக்களைப் புரிந்து கொள்வதும் கடினமானவை. கருமயோகம் தன்னலமற்ற சேவையை அடிப்படையாகக் கொண்டது. இது பிரத்தியேகமானது. எல்லோராலும் பின்பற்றக்கூடியதல்ல. பக்தியோகம் அல்லது பக்திமார்க்கம் மக்களிடையே பிரபலமானது. பக்தன் இறைபால் காதலாகி கசிந்துருகி பயபக்தியுடன் தனது அன்பை வெளிப்படுத்துகின்றான். முதன்மையானவர் என்று அவன் கருதும் கடவுளிடம் நம்பிக்கை வைக்கிறான். கடவுள் ஒரு ஆழ்ந்த அன்புமிக்க சிருட்டி கர்த்தாவாகக் கருதப்படுகின்றார். இறைபற்று பல வடிவங்களில் காணப்படுகின்றது. மனித உறவுகளில் காதல் நட்பு மரியாதை சேவகம் போன்ற பல உண்டு. இந்த உறவுகளில் ஏதாவது ஒன்றை மனத்தில் வைத்து பக்தன் இறைவனோடு தன்னை இணைத்துக் கொள்கின்றான். கடவுளின் அவதாரங்கள் மக்களிடையே தோன்றி மனிதரோடு வாழ்ந்து உறவாடி மனிதரை பாதுகாத்து ஈடேற்றினர். என்ற புராணக்கருத்துக்கள் மக்களிடையே ஏற்கப்பட்டுள்ளன. எனவே கடவுளை அணுகுவதும் பக்தி வைப்பதும் இலகுவானது. பக்தி மார்க்கம் திராவிட நாட்டின் விளைபொருள் என பத்ம புராணம் கூறுகின்றது. பக்தி மார்க்கம் சமயக்

கிரிகைகளையும் சாதி வேற்றுமைகளையும் அலட்சியம் செய்ததால் பிராமணர்கள் இதனை எதிர்த்தார்கள்.

தென்இந்தியாவில் அதுவும் தமிழ் மக்களிடையே பக்தி இயக்கம் தொன்மையானதும் பாரம்பரியமானதுமாக இருந்து வந்துள்ளது. கி.பி600–900 காலப்பகுதி பக்தி இயக்கத்தின் காலம் எனக் கருதப்படுகின்றது. இக்காலப்பகுதியில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி பக்திஇயக்கத்தை வளர்த்தார்கள். நாயன்மார்கள் திரு முறைகளையும் ஆழ்வார்கள் திவ்விய பிரபந்தங்களையும் தமிழில் பாடினார்கள்.

நாயன்மார்களில் முக்கியமானவர்கள் நால்வர். திருநாவுக்கரசர்(கி.பி.590–671) ஆரம்பத்தில் சைவராக இருந்து பின் சமண சமய மடத்தலைவராகி மீண்டும் சைவத்துக்கு வந்தவர். பல்லவ அரசின் முதலாம் மகேந்திரவர்மனை சமணத்திலிருந்து சைவத்துக்கும் மதம் மாறச் செய்தவர். சேவகன் என்ற உறவு நிலையில் இறைவனோடு ஈடுபட்டவர் திருஞானசம்பந்தர்(கி.பி.700) சிறுவயதிலேயே ஞானம் பெற்றவர். சமணரையும் பௌத்தரையும் வாதில் வென்றவர். பாண்டிய மன்னனை சமண சமயத்திலிருந்து சைவசமயத்திற்கு மாற்றியவர். மகன் என்ற உறவு முறையில் இறைவனோடு ஈடுபட்டவர். சுந்தரமூர்த்தி (கி.பி.800) தோழமை முறையில் இறை வனோடு ஈடுபட்டவர். கிரகஸ்தனாக குடும்பவாழ்க்கை நடத்திக்கொண்டட கடவுளின் உன்னதமான பக்தனாக இருப்பது மட்டுமல்ல இறப்பு பிறப்பு சக்கரத்திலிருந்தும் விடுதலை பெற்று முத்தி யடையலாமென்பதற்கு உதா ரணமாய் விளங்குபவர் சுந்தரர். மாணிக்கவாசகர் (கி.பி.900) கடவுளின் கிருபை பெற்றவர். குருவைத் தேடினார். இறைவன் குருவாக வந்தார். மாணிக்கவாசகருக்கு ஞானத்தை அருளினார். இங்கு குருசீட உறவைக் காண்கின்றோம். மாணிக்கவாசகர் பாடியவை திருவாசகம் (கடவுள் மேல் சிறப்பாக சொல்லிய வாசகம்) திருக்கோவையார் என்பன மற்றைய மூவரும் பாடியன தேவாரம் (கடவுள் மேல் சாத்திய மாலை ) எனப்படும். நால்வரும் பாடிய பக்திப்பாடல்களின் எண்ணிக்கை 9295 நாயன்மார்கள் தமிழை வளர்த்தார்கள். சாதாரண மக்களிடையே பக்திப்பிரவாகத்தை ஏற்படுத்தினார்கள். பௌத்த சமண சமயங்களின் தாக்குதலுக்கு ஒடுங்கி வந்த சைவத்துக்கு புத்துயிரும் புத்துணர்ச்சியும் ஊட்டி சைவத்தை தமிழர் பெரும்பாலானோரின் சமயமாக நிலை நிறுத்தினர். வீடுபேறு அடைவதற்கு பற்றற்றதன்மை சுயநலமற்ற சேவை இறைவனை சரணாகதியடைதல் என்பன தேவையானவை. நாயன்மார்களின் வாழ்க்கை மக்களுக்கு ஒரு வழிகாட்டி பக்தி மார்க்கம் மூலம் வீடுபேறு அடைதலை வாழ்ந்து காட்டினார்கள். இவர்க ளின் வரலாறு சைவசித்தாந்தத்துக்கு வித்திட்டதும் வைஷ்ணவஆழ்வார்கள் நாராயணன் இராமர் கிரு ஷ்ணரும் கோபிகளும் சம்பந்தமாக பாடிய திவ்விய பிரபந்தங்கள் 4000 . ஆழ்வார்களின் காலப்பகுதி கி.பி. 700–கி.பி.90 ஆகும்.

பிரபலமான பன்னிரு ஆழ்வார்களுள் பின்வருவோர் அடங்குவர். பொய்கைஆழ்வார் பூதத்து ஆழ்வார் திருமழிசை ஆழ்வார் நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், ஆண்டாள், திருப்பன ஆழ்வார், திருமங்கைஆழ்வார், ஆழ்வார்கள் நாயன்மார்களில் பெரும்பான்மையோர் தாழ்ந்த சாதியார், என்று கருதப்பட்டவர்களில் இருந்து வந்தவர்கள். ஆண்டாள் அத்தகையவர். சிறந்த கிருஷ்ண பக்தை. அவர் திருப்பாவை பாடினார். இவர்களின் பக்தி இலக்கியம் அன்றைய சாதி வெறி பிடித்த ஆண் ஆதிக்க சமுதாயத்தினால் ஏற்கப்பட்டதாயின் பக்தி இலக்கியத்தில் மகத்துவத்தை இலகுவில் புரிந்துகொள்ளலாம். ஆழ்வார்களின் பக்தி இலக்கியத்தை தத்துவ மேதை இராமானுசர் வைஷ்ணவர்களின் வேதங்கள் என்று ஏற்றார்.

தமிழ் நாட்டில் ஆரம்பித்த பக்தி இயக்கம் பின்னர் இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்குப் பரவியது. நர்மதேவா (1270–1350) வங்கத்தில் விஷ்ணுவைப்பற்றிய பக்தி இலக்கியத்தை ஆக்கினார். பாருசந்திதாஸ் (1415) எனும் வங்கக் கவிஞர் கிருஷ்ணரைப்புகழ்ந்து ஸ்ரீகிருஷ்ண கீர்த்தனங்கள் பாடினார். வைஷ்ணவ முனி இராமநந்தரின் சீடராகிய கபீர் (1440–1518) அன்பு மார்க்கத்தைப் போதித்தார். பஜன், உண்மை, கருணை என்பன மூலம் கடவுளை அடையலாம். கடவுள் இந்து முஸ்லீம் எல்லோருக்கும் ஒருவரே என்றார். இந்துக்களும் முஸ்லீம்களும் அவரைப் பின்பற்றினர். சைத்தன்னியா (1486 –1534) வங்கத்தில் கிருஷ்ணரை முழுமுதற்கடவுளாக ஏற்றுக்கொண்ட ஒருபிரிவை தாபித்தார். பரமாத்மாவின் நாமசங்கீர்த்தனத்தை பஜனையில் பாட வற்புறுத்தினார். மீராபாய் (1489–1546)ராஜஸ்தானில் சித்தூர் ராணியாக இருந்தவர். தனது பதவியைத் துறந்து இசைவாணராகி கண்ணன் பால் உருகிப்பாடிய பஜன்கள் பிரசித்தி பெற்றவை. இன்னும் வழக்கில் உள்ளவை. வல்ல பசாரியார்(1600) மதுராவில் பக்தி இயக்கத்தை ஆரம் பித்தார். அது பின்னர் இராஜபுத்தானா பஞ்சாப் பகுதிகளுக்குப் பரவியது. சம்ரதேவா(1600) அசாமில் பக்தி இயக்கத்தை வழிநடத்தினார். துக்காராம் (1700) மஹாராஷ்டத்தில் பக்தி இயக்கத்தில் ஈடுபட்டார். மக்கள் பேசும் மொழியில் இசையுடன் கலந்த உணர்ச்சியூட்டும் பாடல்கள் மக்களை ஈர்த்தன. பக்திஇயக்கம் மக்கள் இயக்கமாக மலர்ந்தது. இந்து சமயம் இன்றும் உயிருள்ள

சமயமாக இருப்பதற்கு பக்தி இயக்கமே காரணம். நாயன்மார்கள் ஆழ்வார்களைப் பொறுத்தவரை பக்தி வீடுபேறு அடைவதற்குரிய மார்க்கமல்ல , பக்தியே வீடுபேறு என்பதாயிற்று.

இந்து சமயத் தத்துவங்களில் வேதாந்தம் முக்கியமானது. மத்தியகாலத்தில் வேதாந்தத்தில் பல அபிவிருத்திகள் ஏற்பட்டன. பாதராயணரின் வேதாந்த சூத்திரத்திற்கு பலர் விளக்கம் கொடுக்க தலைப்பட்டனர்.

### அத்வைதம்

மேற்படி சூத்திரத்திற்கு தத்துவஞானிகளுள் தலைசிறந்தவரென உலகோர் கருதும் சங்கரர் எழுதிய உரையே மிக முக்கியமானது. சங்கரர் (கி.பி.788-820) தென்னிந்தியாவிலுள்ள மலபாரில் கல்லடி என்னும் இடத்தில் பிறந்தவர். அவரது கொள்கைகளைக் கூறும் வேதாந்தம் அத்வைதம் எனப்படும். அதன்படி பிரமனும் ஆன்மாவும் ஒன்றே. பிரமனே(ஈசுவரன்) உண்மைப்பொருள். தன்னை அன்றிப் பிற அனைத்தையும் உணரும் ஆற்றல் பிரமனுக்கே உரியது. உலகம் , அறிவு முதலியன நிலையற்றன. பிரமன் என்றும் உண்மைப்பொருளாகவே உள்ளது. தன்னை வாழ்த்தக்கூடியவரில் உள்ளுணர்வில் பிரம்மம் புலனாகின்றது. அறிவின்மையால் ஆன்மா உலக வாழ்வில் இருந்துகொண்டு இடர்ப்படுகின்றது. அறியாமை அகன்றால் ஞானம் தோன்றும். ஞானம் தோன்றினால் மோட்ஷம் கிட்டும். மோட்சத்தை அடையவேண்டியவன் பெறவேண்டியவை நான்கு. அவை விவேகம், வைராக்கியம், மன்னித்தல்,மறத்தல் என்பன. ஆத்மனுக்கு ஒழுக்கக்கட்டுப்பாடு தேவை. மோட்சத்திற்குரிய சாதனங்கள் ஞானம், கருமம், பக்தி. இவற்றுள் ஞானமே சிறந்தது. ஞானவான் முக்தனாவான். உடலோடு கூடியிருந்தாலம் ஜீவன் முத்தனாகின்றான். பிரமமும் ஆன்மாவும் இணையும் போது மோட்ஷம் தோன்றும். அப்போது ஆன்மா மறையும். இதுவே அத்வைதத்தின் சிறப்பு .

## விசிட்டாத்வைதம்

தென்னிந்தியாவில் காஞ்சி புரத்தில் பிறந்து, தமிழர் இராமானுசர்.(1017-1137) . வைஷ்ணவ சமயப்பிரிவை தோற்றுவித்தவர். மாபெரும் தத்துவ ஞானி. பக்தி இயக்கத்திற்கு தத்துவக்கருத்தை இயற்றியவர். வேதாந்த சூத்திரத்துக்கு அவரது விளக்கப்பேருரை விசிட்டா த்வைதம் எனும் தத்துவமாகும். இது ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உள்ள இருமை-இருமையின்மைக் கொள் கையைக் கொண்டுள்ள வேதாந்தம். இதன்படி உலகம், உயிர், இறைவன் ஆகிய மூன்றும் உண்மைப்பொருட்கள். எனினும் இறைவனே உயிர்கள் அனைத்திற்கும் உலகிற்கும் உள் நின்று அவை அனைத்தையும் இயக்குகின்றான். இறைவன் உயிரிற்கு உயிராய் நிற்கும் காரணத்தால் இறைவன் வேறு உயிர் வேறல்ல. இரண்டும் ஒன்றுதான். உயிரை இறைவனது உடலாக்கி இறைவனை அவ்வுடலுக்கு உயிராக்குகின்றார் இராமானுசர். இறைவனுக்கும் உயிருக்குமுள்ள இந்த சரீர சம்பந்தம் அவரது கொள்கையிலே முக்கியமான அம்சம். ஆன்மாக்கள் பிறந்து இறந்து அல்லலுறுவதற்கு அவற்றின்

அறிவுக்குறைவும் அதனால் ஏற்படும் கன்மங்களுமே காரணம். பிறவித்துன்பத்தில் இருந்து நீங்கி நாராணன் வீற்றிருக்கும் வைகுண்டத்தை அடைவதே வீடுபேறு. இதற்கு கருமமார்க்கம், ஞானமார்க்கம், பக்திமார்க்கம், ஆகிய மூன்றும் துணை செய்யும். இறைவனை வல்லமையிலும் அருளிலும் பூரண நம்பிக்கை வைத்து தன்னை முற்றாக அவனிடம் ஒப்படைத்தல் பிரபக்தி எனப்படும். அதனை முறையாக மேற்கொண்டால் முத்தி கைகூடும். கருமத்தையும் ஞானத்தையும் பக்திக்கு துணையாக்கிக்கொள்ள வேண்டும். விதிக்கப்பட்ட கடமைகள் அனைத்தையும் பலனை எதிர்பாராது செய்யவேண்டும். இறைவனை நமது அன்புக்கு அதிக பாத்திரமான பொருளாகக் கருதி இடையறாது அவனையே தியானித்தவண்ணமும் உபாசித்தவண்ணமும் இருத்தல் வேண்டும். இது கைவர ப்பெறின் இதன் முதிர்வில் இறைவனது காட்சி கைகூடும்.

மனிதனும் முயலவேண்டும். இறைவனும் அருளுவார். வைகுண்டத்திற்குச் செல்லும் ஆன்மாக்கள் அங்கு எப்போதும் இறைவன் தரிசனத்தை கண்டு களிக் கின்றனர்.விசிட்டாத்வைத தத்துவங்கள் ஆழ்வார்களுடைய திவ்விய பிரபந்தங்களால் மகிமை அடைந்துள்ளன

## துவைதம்

தென்னிந்தியாவில் உடுப்பி என்னும் இடத்திற்கு அண்மையிலுள்ள கிராமத்தில் பிறந்தவர் மத்துவர்( 1199) இளமையில் துறவியானவர். அவரின் வேதாந்தக்கொள்கை துவைதம்' எனப்படும். துவைதம் என்றால் இரண்டு என்பது பொருள். ஆன்மா வேறு இறைவன் வேறு இவை இரண்டெனும் நிலை நீங்கி ஒன்றெனும் நிலையை ஒருபோதும் அடைவதில்லை. எப்போதும் இரண்டு இரண்டுதான் என்பது மத்துவரின் கொள்கை. ஈசுவரன், சீவன், சடம், ஆகிய மூன்று பொருள்களும் என்றுமே உள்ளவை. இவற்றிற்கு இடையே உள்ள பேதங்களும் நித்தியமானவை. வேற்றுமைகள் ஒருபோதும் அழியா. விஷ்னுதான் பரம்பொருள். ஆன்மாக்கள் எல்லாம் ஒத்த இயல்பை உடையன அல்ல. சில ஆன்மாக்கள் விமோசனம் கிடையாது நரகத்தை அடையும். ஆன்மாக்கள் இறைவனை நேரே அணுக முடியாது. இறைவனது புத்திரனான வாயுவின் மூலமே இறைவனை அணுக முடியும். ஆன்மாக்கள் மோட்ஷத்தில் அனுபவிக்கும் ஆனந்தத்தில் கூட அவைகளின் இயல்புக்குத் தக ஏற்றத்தாழ்வு உண்டு.

தொடரும்..........

**க.குணரத்தினம்**

# கங்கையாம் மங்கை மடியில்....



ஹரிதாச கிரிதாஸன்

எத்தனைச் சுக மளித்தாய்!
எத்தனை இதம ளித்தாய்!
இத்தரை மாந்தர் வாழ்வில்
எத்தனை சுமைகு றைத்தாய்!
பித்தென எம்மை ஆக்கிப்
பெருமிதம் அடைய வைத்தாய்!
உத்தர தேசம் சென்று
உவந்துனை ஏன்ம றைத்தாய்?

கங்கையில் காலை வைத்தால்
கறையெலாம் கரையு மென்பார்!
கங்கையாய்ப் பெருகி நித்தம்
கானங்கள் இசைத்து வந்த
சங்கீத ஊற்றாம் உன்னைச்
சடுதியில் அடைத்து விட்டாள்
கங்கையாம் மங்கை! எங்கு
கழுவுவாள் தனது பாவம்?

ஆடிநீ அசையும் போதும்
அபிநயம் புரியும் போதும்
பாடிநீ உருகும் போதும்
பார்த்தவர் உள்ளம் துள்ளும்!
சாடிநீ வைத போதும்
சபையதில் சுகமே கொள்ளும்!
கோடிநீ சேர்வ தாலா
குவலயம் அமைதி கொள்ளும்!

அரங்கினை நிறைக்க வைத்தாய்
அனைவரையும் சிரிக்க வைத்தாய்!
சுரங்களை இழைத்த வேளை
சுகமழை பொழிய வைத்தாய்!
கரங்கள்யாம் பெற்ற தற்குக்
காரணம் நீவ குத்தாய்!
இரங்கற்பா எழுது தற்கு
ஏனிந்த வாய்ப்ப ளித்தாய்?

கீர்த்தனம் செய்வ தொன்றே
கீழ்மைகள் தீர்க்கும் என்று
ஆர்த்தவன்! ஊர்கள் தோறும்
அலைந்தவன்! தேடிச் செல்வம்
சேர்த்தவன்! தென்னாங் கூரில்
சீர்பெறும் கோயில் கட்டிப்
பார்த்தவன்! கொஞ்சம் நின்று
பாராமல் பறந்த தென்ன?

குருமுகம் காணும் கண்ணும்
குருபெயர் மேவும் நாவும்
குருபணி செய்யும் கையும்
குருவருள் எண்ணி எண்ணி
உருகிடும் உனது மெய்யும்
உலகிதை வியக்கச் செய்யும்
ஹரிதாஸ குரவே! உன்றன்
அரும்பணி தொடரச் செய்க!

நன்றி : குண்டூசி

# தேவாதி தேவன்

சாலினி

''அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படி கண்டிலர் மீண்டும் பார்மிசைக் கூடி
அடி கண்டிலேன் என்று அச்சுதன் சொல்ல
முடி கண்டேன் என்று அயன் பொய் மொழிந்தானே''

என்று மகாசிவராத்திரிக் கதையை இரத்தினச் சுருக்கமாக்கி திருமந்திரமாக திருமூலர் தருகின்றார். முன் ஒரு காலத்தில் பிரம்மனும் திருமாலும் தங்களில் யார் பெரியவர் என்று வாக்குவாதம் செய்தனர். அது முற்றிப் போரில் முடிந்தது. இதைப்பார்த்த பரம்பொருள் அவர்கள் முன் ஓர் அனற் பிழம்பாய் காட்சி அளித்தான். "நானே கடவுள்" "நானே கடவுள்" என்று போர் புரிந்த பிரமனும் திருமாலும் அச்சோதிப் பிழம்பைப் பார்த்து முதலில் திகைத்தனர். பின்னர் அதனுடைய அடியையும் முடியையும் காண்பவரே அவர்களில் பெரியவர் என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

திருமால் பன்றி(வராக) உருவெடுத்து நிலத்தையும் பிளந்து சென்று பாதாளத்தில் தேடியும் அந்தச் சோதிப்பிழம்பின் அடியைக் காண முடியவில்லை. திருமால் தன் தோல்வியை ஒப்புக்கொண்டான். பிரமனே அன்னப் பறவை வடிவெடுத்து முடியைக் காண வேண்டும் என்ற ஒரே நோக்கில் பறந்து கொண்டே இருந்தான். எனினும் முடியைக் காண முடியவில்லை. முடியைக் காணாதவன் தன் தோல்வியைக் ஒப்புக்கொண்டிருக்கலாமே? அதற்கு அவன் மனம் இடம் தரவில்லை. திருமாலை வென்று விடவேண்டும் என்ற ஆசை அவனை பொய் பேச வைத்தது. தான் முடியைக் கண்டதாக பிரமனே பொய்சொன்னான். பொய்ச்சாட்சிக்குத் தாழம்பூவை துணையாகக் கொண்டான். இதைப் பார்த்திருந்த பரம்பொருள் சோதியில் இருந்து வெளிப்பட்டு பிரமனுக்கு எங்கும் கோயில் இல்லாது சபித்தான். பொய்ச்சாட்சி சொன்ன தாழம்பூவை பூசைக்கு உதவாத மலராக்கினான். பிரமனும் திருமாலும் பதை பதைத்து அஞ்சி மன்னிப்புக் கேட்டனர். அடிமுடி இல்லாமல் சோதி வடிவாக நின்ற பரம்பொருள் பிரமனும் திருமாலினதும் வேண்டுகோளுக்கு இரங்கி சோதிலிங்கம் ஆக காட்சியளித்தனர். இதுவே லிங்கத் தோற்றத்திற்கு மூலம் என்று லிங்கபுராணம் கூறுகின்றது. லிங்கம் ஏன் வட்டவடிவாக இருக்கின்றது. வட்டமான வடிவத்திற்கு அடிமுடியில்லை ஆதி இல்லை , அந்தம் இல்லை. மற்றவைகளுக்கு உண்டு. ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருள் சிவம் என்பதை சிவலிங்கம் காட்டுகின்றது. சரியான வட்டமாக இல்லாது சிவலிங்கம் நீள்வட்டமாக இருப்பது பிரபஞ்சம் நீள்வட்டமாக இருப்பதை உணர்த்தவேயாகும். விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே பரம்பொருள் சோதிப்பிழம்பாகத் தோன்றி சோதிலிங்கமாக வந்த இரவே சிவராத்திரியாகும்.

"அரியோடயனும் அறியாவண்ணம்
அளவில் பெருமையோடு
எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான்"

எனச் திருஞானசம்பந்தரும்

"அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாரோ"

என்று மாணிக்கவாசகரும் பாடிப் பரவசப்பட தாயுமானவர்

"ஆங்காங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தப்பூர்த்தியாகி அருளோடு நிறைந்தது ஏது?"

எனத் தம்மை நோக்கியே கேள்வி கேட்டு இச்சிவராத்திரி தத்துவ விளக்கத்தை ஆராய்கின்றார்.

இவர்களுக்கெல்லாம் ஒருபடி மேலே சென்று நாவுக்கரசர்

"அயனோடு மால் அறிவரிய அளவாய் நீண்ட
தேவாதி தேவன் சிவன் என்
சிந்தை சேர்ந்திருந்தான்." என்று மார்தட்டி கூறுவதோடு நில்லாது

மாலும்அயனும் காணப் பரம்பொருளை தாம் எங்கே கண்டார் என்பதை வெற்றிப்பெருமிதத்தோடு கூறுகின்றார்.

"திருமாலொடு நான்முகனும் தேடித்
தேடொனாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்"

ஆகா! பரம்பொருளைத் தேடி எவ்வளவு அற்புதமான வழி பரம்பொருளைத் தேடி எங்கும் திரியவேண்டாம். உங்களுக்குள்ளே தேடுங்கள் கிடைப்பார் என்கின்றார். எமக்குள்ளே எப்படி தேவாதி தேவனைத் தேடுவது எனத் திகைக்கின்றீர்களா? அதற்கும் அவரே வழி காட்டுகின்றார்.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடப்படும் ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே"

இந்த வழியை ஒருமனத்தோடு பின்பற்றினால் சிவராத்திரி என்ன எல்லா இராத்திரிகளிலும் பரம்பொருள் வெளிப்படுவான்.

# வள்ளுவன் யார்?

## திரு. மு.அழகப்பன்

**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான் புகழ் கொண்ட தமிழ் நாடு**

இப்படிப் புகழ்பெற்ற தமிழகத்திலோ பிறநாடுகளில் வாழும் தமிழர் மத்தியிலோ வினா எழுப்புதல் வியப்புக்குரியது. வள்ளுவராண்டு ஈராயிரத்தைக் கடந்த பின்னரும் இந்தக் கேள்வி எழும்புவது மேலும் வியப்புக்குரியது. வள்ளுவன் யார்? என இன்னும் நாம் அறியவில்லையா? வள்ளுவர்தான் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மயிலாப்பூரிற் பிறந்து வளர்ந்து ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறளை ஆத்த தமிழ்மகான் என்கிறது ஒரு குரல். இவையெல்லாம் கதையென்று மற்றோர் குரல். ஆதி என்னும் புலைச்சிக்கும் பகவான் என்ற பிராமணருக்கும் பிறந்தவர்தானே வள்ளுவர் என்றொருகுரல். அதனாலேதான் தாய் தந்தையரைத் துதித்துப்போற்ற "ஆதிபகவன் முதற்றே உலகு" என்று முதற்குறளிலேயே பாடிவைத்திருக்கின்றார். பொய் பொய் சுத்தப்புரட்டு என்று முழக்கம் செய்கின்றது மற்றோர் குரல்.

மதுரையில் வாழ்ந்து சங்கப்புலவர்தம் செருக்கினை அடக்கவில்லையா? என்றொருசாரார் எடுத்துரைக்க, மறுசாரார் தடுத்துரைக்கவில்லையா? இது என்ன விவாதம்!

ஆராய்ச்சியாளருக்கே விட்டுவிடுவோம். ரிஷி மூலமும் நதிமூலமும் ஆராய வேண்டுவதில்லையா?

The Dark Unfathomed Caves Of Ocean Bear
The Purest Gems Of Fullest Ray Serene.

சேற்றில் வளரும் செந்தாமரைகுறட்பாக்களிலிருந்து அவர்தம் அருமை பெருமைகளை அறியலாம்.

சொற்சுருக்கமும் பொருட்செறிவுமுடையதோர் நீதி நூல்.

"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப்புரட்டிக்
குறுக்கத்தறித்த குறள்" என்றார் -இடைக்காடர்
கடுகையில்லை அணுவைத்துளைத்து ஏழ்கடலைப்
புரட்டிக் குறுகத்தறித்த குறள் என்றார் -ஔவையார்
ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தினொடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்கலாம் -நத்தத்தனார்

மனிதர் மனிதராய் வாழ வழிகாட்டும் நூல்.

சென்ற காலச்சிறப்புக்களும் நிகழ்கால நிலைகளும் வருங்கால வாய்ப்புக்களும் மிளிர்கின்ற நூல். காலம் சாதி சமயம் முதலிய வரம்புகளுக்கு அப்பாற்பட்ட நூல் ஏறக்குறைய எண்பத்தைந்து பிறமொழிகளிற் பெயர்க்கப்பட்டதும் பைபிளுக்கு அடுத்தபடியாகப் பிறமொழி பலவற்றில் ஆக்கப்பட்டதுமாகிய அருமையான தமிழ்மொழிக்களஞ்சியமாம் திருக்குறளாலேயே தமிழ்மொழி சிறந்து விளங்குகிறது. தமிழர்கள் பெருமிதத்தோடு தலைநிமிர்ந்து நிற்கின்றனர்.

"இந்திய அரசை விட்டுக்கொடுக்கச் சம்மதிப்போம். ஆனால் மில்ட்டனையும் ஷேக்பியரையும் இழக்க ஒருநாளும் சம்மதிக்கமாட்டோம் என்று நம்மை முன்னம் ஆண்ட ஆங்கிலேயர்கள் சொன்னார்கள். அதுபோலவே நாமும் எதை இழந்தாலும் திருக்குறளை இழக்கச் சம்மதிக்க மாட்டோம் என்று சொல்லும்படியாக அமைந்த அரிய கருத்துப்பெட்டகம் திருக்குறள்.

வாழையடிவாழை என வந்த அறிஞர்கள், கவிஞர்கள் வரிசையில் திருவள்ளுவரை வைத்துப் போற்றாதவர்கள் யாருமில்லை. இராமக்கோனான் பெண்சாதியை இராவணக்கோனான் கொண்டுபோய்விட்டான். அனுமர்க்கோனான் மீட்டுக்கொண்டு வந்தான் என ஒரே மூச்சில் இராயமாயணத்தைச் சொல்வது போல


அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என ஒரே மூச்சில் திருக்குறளையும் சொல்லி முடிக்கலாம்.



**தேவாரம்**
**மூலமும் உரையும்**

**பெற்றுக்கொள்ள நீங்கள்**
**நாடவேண்டிய**
**இடம்**

தமிழ் நிலையம்
ஏ.ஆர்.ஆர் காம்ப்ளெக்ஸ்
141 உஸ்மான் சாலை
தி.நகர்
சென்னை 17



# எழுத்துலகில் இளைய நெஞ்சங்கள்



## எங்கள் வீடு

இது எங்களுடைய அழகான வீடு. இதில் நானும் அப்பாவும் அம்மாவும் சந்தோஷமாக வாழுகின்றோம். என்னுடைய பெயர் சொரூபா. எனக்கு வயது ஐந்து.

தமிழ்ச் சங்க கல்வி நிலையம்
ஓபர் ஆர்கவுலங்கந்தால்
சுவிர்சலாந்து

## ஔவையாரும் முருகனும்

ஒரு நாள் ஔவையார் காட்டு வழியே நடந்து களைப்படைந்துவிட்டார். ஒரு மரத்தின் கீழ் இருந்தார்.அப்பொழுது ஒரு சிறுவன் நாவல் மரத்தில் நிற்பதைக் கண்டார். தம்பி எனக்குப் பசியாக இருக்கின்றது.சில பழங்களைப் பிடுங்கிக் கீழே போடு என்றார்.பாட்டி சுட்ட பழம் வேண்டுமா அல்லது சுடாத பழம் வேண்டுமா? என்று சிறுவன் கேட்டான்.ஔவையார் சுட்ட பழம் போடு பார்ப்போம் என்றார். சிறுவன் பழங்களை மணலுள் போட்டான். ஔவையார் பழங்களை எடுத்து ஊதிஊதிச் சாப்பிட்டார்.பழம் நன்றாகச் சுடுகிறதா? பாட்டி என்று சிறுவன் கேட்டான்.ஔவையார் வெட்கம் அடைந்தார். ஔவையார் மேலே பார்த்தார். சிறுவனைக் காணவில்லை. முருகன் வேலுடன் காட்சி அளித்தார். ஔவையார் முருகனைப் போற்றி வணங்கினார்.

**மயூரன்**
**வயது–8**

ஔவையார் ஆதி பகவானின் குழந்தைகளில் ஒருவர் ஆவர். ஆதி பகவன் திருமணத்தன்று செய்த ஒப்பந்தப்படி குழந்தைகளை பிறந்த உடன் அந்த அந்த இடங்களில் விட்டுச்சென்றனர். அப்படியே ஔவையாரையும் ஒரு கூடையில் வைத்து நதியில் விட்டுச்சென்றனர். அந்தணர் ஒருவர் நதிக்கு நீராடச்சென்றார். அங்கே குழந்தையைக கண்டார். குழந்தையை அன்போடு எடுத்துச் சென்று மனவியிடம் கொடுத்தார். அவர்கள் மகிழ்வோடு அன்பாகக் குழந்தையை வளர்த்து வந்தனர். ஔவையார் அங்கே ஒரு மரத்தின் கீழ் இருந்த பிள்ளையாரை மிகுந்த பக்தியோடு வணங்கி வந்தார். இளமையிலே மிகுந்த கல்வி அறிவுள்ளவராக இருந்தார். இவருக்குப் பெற்றோர் திருமணம் செய்ய நிச்சயித்தனர். ஆனால் இவர் திருமண வாழ்க்கையை விரும்பி இருக்கவில்லை. பிள்ளையாரிடம் முறையிட்டார். தனது இந்த உருவத்தை மாற்றிக்கிழவி உருவம் தரவேண்டும் எனப் பிள்ளையாரிடம் வேண்டினார். பிள்ளையாரும் அவ்வாறே அருளினார். அதுமுதல் ஔவையார் ஊர் ஊராகச்சென்று பாக்கள் பாடினார். தமிழ் மொழிக்குத் தொண்டு செய்தார். இதனால் இவரது அரிய பெரிய தமிழ்ப்புத்தகச் செல்வங்கள் எங்களுக்குக் கிடைத்துள்ளன.

ஔவைக்கிழவி நம்கிழவி
அமுதினும் இனிய சொற்கிழவி.

**ஜனனி**
**வயது 11**

அன்புமிக்க பெற்றார்களுக்கு,
இப்பகுதியில் உங்கள் பிள்ளைகளைக் கொண்டு முடிந்தவரை சமய சம்பந்தமான விடயங்களை எழுதிவித்து அனுப்பும்படி அன்போடு வேண்டுகின்றோம்.– ஆசிரியர்

# MAHA SIVARATHIRI
## மகா சிவராத்திரி

The 27th of February 1995 is Maha Sivarathiri day. This festival celebrates the removal of all our burdens and the beginning of happiness. People keep awake all night and pray Lord Sivaperuman சிவபெருமான் . Sivaperuman is our supreme God. Sivarathiri falls in the Tamil month Maasi(மாசி). This month corresponds to the English calendar from 14th of February to 14th of March approximately. Some people observe fasting on this day. Infact Maha Sivarathiri Viratham ( மகா சிவராத்திரி விரதம்) is one of the most important fasting day among Siva virathams(மகாசிவராத்திரி). Devotees fast, sing hymns like thevaram (தேவாரம்), and meditate all night.

According to Hindu Puranas (புராணங்கள்), once upon time, Vishnu (விஷ்ணு) and Bhrama (பிரம்மா) had a disagreement over their supremacy. Bhrama claimed that he was the greatest as he was the creator. Vishnu claimed that he was the greatest as he protected the world from destruction. hence they argued. They forgot that there was someone more supreme than them. At this point Sivaperuman decided to bring them to their senses and appeared as a fire between them. That flame (சோதி) did not appear to have a beginning or an end. A voice said that who ever finds the base or the crown of this flame shall be the most supreme being.

Bhrama assumed the shape of a swan and started to fly upwards while Vishnu became a pig and started to dg into the soil. After going to great lengths neither of them were successful. Vishnu soon realised that Sivaperuman had no beginning and no end. He is every where and in everything in the universe.

However Bhrama continued his relentless search. As he was flying higher and higher he noticed a petal of thalamboo (தாழம்பூ) falling. He asked the petal as where it was coming from. The petal replied that it was falling from Sivaperuman's crown and that it was falling for many years. Bhrama asked the petal to tell a lie on his behalf and say that it, (the petal) saw Bhrama near the crown of the flame. They both went to Sivaperuman and Bhrama claimed that he had seen the crown of the flame and that he picked that petal from there. The petal agreed with that . Sivaperuman admonished Bhrama for telling a lie and said that Bhrama would never have a temple of his own anywhere in the world. And as for the petal of the sweet scented Thalampoo, Sivaperuman said that the flower would never be used in temples for prayer.

Sivaperuman, who until then appeared as a flame(சோதி) formed a Lingam ( இலிங்கம்) This formation is called Lingotpavam (இலிங்கோற்பவம்)

## WHAT IS DHARMA ? WHAT ARE ITS FORMS?

When God created the universe, He endowed it with order, with the laws to govern creation. Dharma is God's divine law prevailing on every level of existence, from the sustaining cosmic order to religious and moral laws which bind us in harmony with that order. We are maintained by dharma, held in our most perfect relationship within a complex universe. Every form of life, every group of men has its dharma, the law of its being. When we follow dharma, we are inconformity with the Truth that inheres and instructs the universe, and we naturally abide in closeness to god. Adharma is opposition to divine law. Dharma prevails in the laws of nature and is expressed in our culture and heritage. It is the piety and ethical practice, duty and obligation. It is the path which leads us to liberation. Universal dharma is known as rita. Social dharma is varna dharma. Human dharma is known as asrama dharma. Our personal dharma is sva dharma. Hinduism, the purest expression of these four timeless dharmas, is called Santana Dharma. The Vedas proclaim, " There is nothing higher than dharma. Verily, that which is dharma is Truth".

Aum Namah Sivaya

# VANDI

Vandi was an old woman of Madurai, the capital city of Pandiya kingdom of South India. She was a very poor woman who eked out a living by selling PITTU a sweet made of rice flour, cooked in steam. She was of a pious disposition, always keeping her mind on the feet of Lord Shiva, enshrined in the famous temple at Madurai. She was kind to every one and many motherless people went to her as to a mother. She used to dedicate her pittu every morning to Lord Shiva in her heart and then only set about selling it in the city.

Now it so happened that the river Vaigai flowing through the city was in spate. The flood had washed away the bunds and the entire city was deluged. The ruler of the country , the Pandya Emperor , was very much upset. He ordered a census of all the houses in the city to be taken immediately and each house assigned a portion of the bank of the river for filling up the breach and for reconstructing the bund. The town surveyors immediately did this and one part was set apart for the old woman Vandi.

Now, Vandi was living alone by herself in her house. There was no one else in her house but, as a citizen, she had to complete the work allotted to her. She went to the temple and supplicated to the Lord.

'' My Lord, through Your grace I had so far known no suffering. Now the King will certainly punish me for neglecting to do my share of the work in closing up the breach. I have no able-bodied male member to undertake the task. Even a hired labourer does not come my way. What shall I do?"

The All-Merciful God saw her plight. He determined to take her pittu, make her piety known to the world and give her salvation. He appeared before her in the guise of an ordinary labourer, young, agile and able-bodied.

'' Oh granny, can you give me some work?" the youthful labourer asked her. She was naturally over-joyed, and like a mother talking to her little son, she said, '' My young friend, the king has set apart a portion of the breach to be closed up by me. Of course I cannot do it. Will you do it for me?" The labourer replied: ''With pleasure, grandma. What are my wages?"

'' I shall give all my broken pittu for your wage"

'' I agree. But just now I am very hungry. Can you give me now all the broken sweets, so that I may eat them, appease my hunger and then start work?"

Vandi agreed and gave him some pitu. He received it with the words, ''Oh granny, this is sweeter than mother's milk. This is indeed a fit offering for the Lord himself."

So saying he left her, went to the flood office and registered himself as the old woman's workman. But he did not do any work. He went about playing in the flood waters instead of attending to his allotted work. Slackness in work was punished with thrashing by the king's supervisors, but this workman was so noble in appearance that they were loth to lay hands on him. But they reported his conduct to the king. Naturally he was very angry to hear this and at once hastened to inspect the spot.

He found the breaches properly filled in and the river bund well built up at all the places except in a small area. '' Who is in charge of this area?" thundered the king. '' This is the spot allotted to the old woman Vandi and yonder is her hired labourer. He is quite a sturdy fellow but he does not do any work" replied the officers and

dragged the young man to the king's presence.

The king got very wild. He immediately drew his golden cane and gave the workman a thrashing. And lo! the workman dropped his spade and basket of earth at the breach and vanished. But the blow which fell on the poor workman was felt by all the men and women, by the king and his ministers and officers, the people of Madurai, by all the animals and birds, by all the sentient and insentient beings on earth and elsewhere.

The king saw what had happened. He realised that the labourer was no other than God himself and that he had come to the earth for the sake of a humble old woman and for her sake had received a cane cut also.

''O, King!'' declared a voice from the heavens, '' We came to the earth as a humble workman and even received your blows in order to make known to you and the world the devotion of the old woman Vandi. Her days are over and we have taken her to the heavens. We caused the river to overflow and flood your city on her account and for the sake of your minister Manikkavasakar who is unequalled in his devotion and surrender to us.''

Angels from the heavens appeared and lifted up the old woman to the celestial abode. The king saw all this. He wondered at the greatness of the devotion of the old woman and the ways of God. He then released his minister Manikkavasakar also from his service and sent him away free to worship the Lord as he pleased.

This is the Manikkavasakar who has sung Thiruvasagam, the sacred utterances, the most famous hymn book in the Tamil language. The story of Vandi has become one of the most cherished legends of the Saivites and it is also called one of the sixty four sports of Lord Siva in the city of Madurai

# SOME QUESTIONS AND ANSWERS

**1. What is meant by the word RELIGION?**

(I) Belief in God
(ii) Any system of faith and worship
(iii) Human recognition of superhuman power.
(iv) Expression of man's belief in and reverence for a superhuman power or powers regarded as creating or governing the universe.

**2. What is Hinduism?**

(i) A term used by Europeans in the modern period to refer to the religious beliefs and practices of the Hindus.
(ii) The names used in India from very old times are Santhana Dharma and Orthodox Dharma. Santhna Dharma means Eternal Religion-a religion without beginning or end.
Orthodox Dharma is called Religion of Vedas.
This is on the basis that Vedas are Foundational Scriptures or religious books supporting the religion.

**3. Who is a Hindu?**

(i) A believer in Hinduism.
(ii) One who practices Santhana Dharma

*K.GUNARATNAM*

Hindus teach vegetarianism as away to live with a minimum of hurt to other beings, for to consume meat, fish, fowl or eggs is to participate indirectly in acts of cruelty and violence against the animal kingdom.

## SWAMI VIPULANANTHA AND PANN ISAI

(பண் இசை)

By S.Kumarasamy M.A.

Swami Vipulanantha (1892-1947) was a great and worthy son of Sri Lanka who brought fame and name to his country by his researches on Ancient Tamil Music. But his researches on Thevaram Pann have not been focused by those responsible for conducting the Centenary Celebrations of the Swami. His ''magnum opus'' , the ''Yarl Nool'' deals extensively with Pann Isai which had been in vogue from the period of Tamil Sangam at Madurai.

The first Sangam existed several centuries before the birth of Christ and the last Sangam till about the second century A.D. Due to the submerging of Madurai by the sea , several sangam works were lost. Land was divided into fine sectors according to the topography of the region. Kuringi, Mullai, Marutham, Neithal and Palai were the names given to each sector. A sect of musicians named Paanar (பாணர்) who sang songs in the respective Pans were patronised by Kings and Chieftains. The musical instrument was the 'Yarl' (a stringed instrument). There were Pans for each division of the land.

Vipulanantha deals with Pann in chapter 5 of his Yarl Nool and in chapter 6 he discusses Thevaram in greater detail (தேவார இயல்). The Panns of the time were assigned to the thevarams which are the devotional hymns of the Saivaites. The word Pann is not Raga as many people think. A Pann includes raga and layam. There were 103 Panns but now we find only 23 Panns.

To quote Professor P. Sambamoorthy, ''In Indian Music,the Thevarams are the earliest musical works. Although the Vedic hymns were earlier, they were not sung to rhythm or tala. Thevarams were sung by the Saiva Saints Sampanthar, Appar and Suntharar at a time when there was no distinction between the Music of North India and South India. The Othuvars (ஓதுவார்) monopolised the Thevarams and they sang in the Temples with devotion and dedication. The Thevarams are Pakthi ragas which touch the core of the heart. Further, the Thevaram formed the basis for the future ragas of the Carnatic music.''

The greatest Chola King , Rajarajan I retrieved the manuscripts (Palm leaves) of the Thevaram in the early 11th Century and reset the Thevarams to Panns with the help of a lady of the Panar sect. The Chola king had the Thevarams engraved on copper plates to prevent them from further sabotage by the priestly class. He made large endorsements for the propagation of Thevaram music which in fact is evident from the inscription on stone slabs. IF NOT FOR THE TIMELY ACTION of this great King, Thevarams would have been LOST TO THE SAIVAITES FOR EVER.

The Swami says that the Thevarams remained till the 12th century unblemished. Evenas late as the 16th century the Panns existed. But when non Tamil Kings ruled Tamil Nadu (Maharastra King at Tanjore) Panns began to disappear. However, the Saiva Adheenams (ஆதீனங்கள்) preserved what they could.

Although the Swami was a Vedanthi of the Ramakrishna mission , he was a Saivaite at heart. He was encaptured by the songs of St.Sampanthar. The Arangetram of the ''Yarl Nool'' took place in the presence of the Idol of the Saint on the day of his Gurupooja.

## WHAT IS THERE TO SAY?

Nothing can be lost and nothing can be gained.
There is nothing curious here. Why be grieved by others?
Jiva will Siva become for those that offer worship.
Will they be reborn on this earth again?

There is nothing to be said ! There is no sin or merit.
If you overcome your foe, the mind , and ever worship God.
You can rest assured that no one is your equal!
Know this, and live with valour in the world!

" Through knowledge attain Knowledge. Know thyself"- he said
If you see nothing separated from you , then you and I are Brahman.
There are no attributes or symbols, no union or division.
There is no ground to say that there are many lives.

There is no place for thinking of this day or the morrow.
Like a cow parted from its calf we make lamination,
That due to our past karma we took birth in this world.
Now let us praise the feet of him who dances in the hall.

What is there to say ? Worship Him and understand His way.
Who with the eye upon His brow cruel kama burnt, who Yaman conquered.
Without other thought within your heart repeat.
The holy letters five, and live from all guile free!

**YOGASWAMI**


# SIXTEEN FORMS OF LORD GANESA

## SHAKTI GANAPATHI




He has one arm around the slim waist of his beautiful consort and shows with the other arm 'no fear' sign(**abhaya**). The two hands carry rope and **ankush.** This figure has a soothing appearance and shines like sky in the evening.

## DHWIJA GANAPATHI





Ganapathi has four elephant heads. In his left hand he carries a book and in the right hand he has a garland of beads. In the oter two hands he carries the Kamandal and the dund (insignia of the sages of yore). He shines bright white.

## SIDDI OR PINKALA GANAPATHI




He carries in his hands ripe mango, a bouquet, suger cane, modak, rope and ankush. Sometimes he is depicted with his consort Sri Smruti. Since he is golden in colour he is called Ganapathi.

## UCCHISHTA GANAPATHI




This figure has six hands carrying in each Veena , garland of beads, water hyacinth, pomegranate, grains of paddy and rope. This dark green coloured figure is depicted in standing posture.

(to be continued)

வாடிக்கையாளர்களுக்கு
மனம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

# Sri Kannan Stores
## EDMONTON

நயம்
நம்பிக்கை
நாணயம்



உங்களுக்குத்
தேவையான
தமிழ், ஆங்கில
சஞ்சிகைகள்
தமிழ், ஹிந்தி, ஆங்கில
வீடியோ, ஓடியோக்கள்
மற்றும்
இலங்கையிலிருந்து
தருவிக்கப்பட்ட
உணவுப்
பண்டங்கள்
உடன் மரக்கறிவகைகள்
ஆகியவற்றை
மலிவு விலையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கொள்வனவு
செய்வதற்கு
நம்பிக்கையோடு
அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

# ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ்

249 Fore street
Edmonton
London
N18 2TY
Tel/Fax 081 884 4979,
081 345 6317



25 புது கடை
பலாலி வீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
இலங்கை

# SHIPPING - AIR FREIGHT - TRAVEL

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES,MACHINERY ETC.**

*TO* **COLOMBO** *AND OTHER WORLD WIDE DESTINATIONS*
*MAIN AGENT FOR AIRLANKA*

**PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE**
All Your Goods Go to Our Bonded Warehouse in Colombo
WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON
SCHEDULED FLIGHTS AT LOW PRICES

உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும் உங்களின் பொருட்களை
ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையினைப் பெறுதற்கும்
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

## GLEN CARRIERS LIMITED

14,Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
Telephone 081 740 8379 / 081 749 0595
Fax : 081 740 4229 Telax : 929657 Glenca G
**BONDED WAREHOUSE**
Laksiriseva, 253/3 Avissawella Rd, Colombo 14 Tel : 575576



# VARSHI'S FOOD STORE

ஒரு தமிழ்க்

நியூமோல்டனில்



களஞ்சியம்

இலங்கையிலிருந்தும்
இந்தியாவிலிருந்தும்
இறக்குமதி செய்யப்பட்ட
அனைத்து உணவுப் பண்டங்களுடன், மரக்கறிவகைகள்
பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஓடியோ, வீடியோ, சீடி
ஆகியவற்றுக்கு நாடவேண்டிய தரமான
நம்பிக்கையான ஸ்தாபனம்

**VARSHI'S FOOD STORE**
**103 BURLINGTON ROAD,**
**NEW MALDEN, SURREY KT3 4LR**
*(Near Burlington Junior School)*
***TEL : 081- 336 0061***



# VINNEY VIGNES

**Certified Accountants &**
**Registered Auditors**

**84 ILFORD LANE**
**ILFORD**
**ESSEX IG1 2LA**
**TEL : 081 553 5876**
**FAX : 081 553 3721**
**MOBILE : 0956 277112**

**COMPLETE ACCOUNTANCY AND TAXATION SERVICES**

**PLEASE CONTACT:**
**T.VIGNESWARA F.C.C.A**

திருமண வைபவங்களிலும் ஏனைய கொண்டாட்டங்களிலும்
உங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய
நீங்கள் நாடவேண்டிய தரமான உணவகம்



# CHITHAARA

சித்தாரா உணவகம்

# RESTAURANT

**FULLY LICENCED**

**SRI LANKAN AND SOUTH INDIAN CUISINE**
**ENJOY THE REAL TASTE OF DELICIOUS**
**SRI LANKAN AND SOUTH INDIAN FOOD**

**TAKE AWAY SERVICE AVAILABLE**
**PARTIES AND WEDDINGS CATERED FOR**

**211, THE BROADWAY**
**WEST HENDON**
**LONDON**
**NW9 7DE**
**081-202 3486/87**

**18,THE AVENUE**
**WEST EALING**
**LONDON**
**W13 8PH**
**081-810 6606/07**

**(BUSINESS LUNCH-12.00 NOON TO 3.00p.m.)**

**OPEN:MONDAY TO SATURDAY (EXCEPT TUESDAY)**
**12.00 NOON TO 3.00p.m. & 6.00p.m. TO 11.30p.m.**
**SUNDAY(BUFFET LUNCH)**
**12.00 NOON TO 3.00p.m. & 6p.m. To 10.30p.m.**



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு, ஐரோப்பாவில் தரமான செல்வம் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்ற சங்கத்தால் 15.1.1995 அன்று வெளியிடப்பட்டது.